RNINUMBER:TNTAM/2018/75087

# மெட்ராஸ் மணி

MADRAS MANI DAILY TAMIL தைரியம் மற்றும் நெறிமுறை பத்திரிகை PUBLISHED FROM - CHENNAI

23.04.2026 (வியாழக்கிழமை) பக்கங்கள் 8 விலை 5.00 மணி 8 ஓசை 33

Facebook/dailymadras@gmail.com dailymardras@gmail.com

5 காதலை தெரிவிப்பதாக கூறி அழைத்துச்சென்று காதலனைத் தீ வைத்து எரித்துக் கொன்ற காதலி பெங்களூரில் பயங்கரம்




6 எரிபொருள் நெருக்கடியால் வங்கதேசத்தில் மொபைல் சேவை முற்றிலும் முடங்கும் அபாயம்



8 தோல்விகளில் இருந்து மீண்டு வருமா லக்னோ அணி? - ராஜஸ்தான் ராயல்ஸ் உடன் மோதல்



### அனைத்து ஏற்பாடுகளும் தயார்

# தமிழகத்தில் இன்று வாக்குப்பதிவு

## 300 கம்பெனி துணை ராணுவம் உள்பட 1.47 லட்சம் போலீசார் பாதுகாப்பு

**சென்னை, ஏப்.23–**

தமிழ்நாட்டில் இன்று சட்டசபை தேர்தல் நடக்க உள்ளது. அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அமைதியான முறையில் தேர்தல் நடத்த 300 கம்பெனி துணை ராணுவம் உள்பட 1.47 லட்சம் போலீசார் நிறுத்தப்படுகின்றார்கள்.

தமிழ்நாடு, கேரளம், அசாம், மேற்கு வங்கம், புதுச்சேரி ஆகிய 5 மாநிலங்களில் சட்டசபை தேர்தல் அறிவிக்கப்பட்டது. இவற்றில் கேரளம், அசாம் மற்றும் புதுச்சேரி ஆகியவற்றில் ஏப்ரல் 9–ஆம் தேதி ஒரே நாளில் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும் நாளை ஒரே கட்டமாக தேர்தல் நடத்தப்படுகிறது. மேற்கு வங்கத்தில் மொத்தம் 294 தொகுதிகள் உள்ளன. இவற்றில் 152 தொகுதிகளில் மட்டும் நாளை தேர்தல் நடக்கிறது. மீதமுள்ள தொகுதிகளில் ஏப்ரல் 29–ஆம் தேதி வாக்குப்பதிவு இடம்பெறும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 2 வாரத்துக்கும் மேலாக அனல் பறக்க பிரசாரம் நடந்து வந்தது. அந்தப் பிரசாரம் நேற்று மாலை 6 மணியுடன் நிறைவடைந்தது. இதையடுத்து நாளை வாக்குப்பதிவு நடக்கிறது. இதற்காக அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை 234 தொகுதிகளிலும் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் உள்ளார்கள். 75,064 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மையங்களுக்கு வாக்கு எந்திர ங்களையும், பிற கருவிகளையும் எடுத்துச் செல்லும் பணி தொடங்கியுள்ளது.

தேர்தலை அமைதியாக நடத்த தேர்தல் ஆணையம் விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது. அந்த வகையில் 300 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள். மேலும் 83,875 காவலர்கள் நியமிக்க ப்பட்டுள்ளனர். 40,427காவல்துறை அல்லாத பணியாளர்களும் நியமி க்கப்பட்டுள்ளார்கள். மொத்தத்தில் 1.47 லட்சம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள். நாளை காலை 7 மணிக்கு ஓட்டுப்பதிவு தொடங்கும், மாலை 6 மணிக்கு நிறைவடையும்.

தமிழ்நாட்டில் மொத்தம் 5.73 கோடி வாக்காளர்கள் உள்ளார்கள். 12 ஆவணங்களில் ஏதாவது ஒன்றைக் காட்டி வாக்களிக்கலாம் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அந்த வகையில் ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, ஓட்டுநர் உரிமம் உள்ளிட்டவை இதில் அடங்கும். வாக்குப்பதிவு முடிந்த பின்னர் ஓட்டு எந்திரங்கள் அனைத்தும் வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்படும். மேற்கு வங்கத்தில் ஏப்ரல் 29–ஆம் தேதி 2–ஆம் கட்ட தேர்தல் நடக்கும். அதன் பிறகு மே 4–ஆம் தேதி 5 மாநிலங்களிலும் பதிவான வாக்குகள் ஒரே நாளில் எண்ணப்படுகின்றன.

# தங்கம் விலை பவுனுக்கு ரூ.400 குறைவு

## வெள்ளி விலையில் மாற்றம் இல்லை

**சென்னை, ஏப். 23–**

காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சென்னையில் இன்று பவுனுக்கு ரூ.400 என விலை குறைந்தது. அதே நேரத்தில் இன்று வெள்ளி விலையில் மாற்றம் ஏதுமில்லை.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை முதலீடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. உலக அளவில் தங்கத்தை இறக்குமதி செய்யும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான போர் தங்கம் விலை மீது தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்நிலையில், இரு நாடுகளுக்கும் இடையேயான போர் நிறுத்தம் நீட்டிக்கப்ப ட்டுள்ளது. இந்த அறிவிப்பை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பகிர்ந்துள்ளார்.

இந்நிலையில், தங்கம் விலை இன்று குறைந்துள்ளது. சென்னையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.50 மற்றும் பவுனுக்கு ரூ.400 என விலை குறைந்தது. இதனால் ஒரு கிராம் தங்கம் ரூ.14,250க்கும், ஒரு பவுன் ரூ.1,14,000க்கும் விற்பனை ஆகிறது.

24 காரட் தங்கம் இன்று பவுனுக்கு ரூ.432 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,24,368க்கும், 18 காரட் தங்கம் பவுனுக்கு ரூ.408 குறைந்து, ஒரு பவுன் ரூ.94,432க்கும் விற்பனை ஆகிறது. வெள்ளி விலை இன்று மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.275, ஒரு கிலோ ரூ.2,75,000க்கும் விற்பனை ஆகிறது.

### வாக்களிக்க செல்வோர் வசதிக்காக

# சென்னையில் இருந்து மதுரைக்கு முன்பதிவில்லா சிறப்பு ரெயில்

**சென்னை, ஏப்.23–**

தேர்தலில் வாக்களிக்க சொந்த ஊருக்கு சென்று திரும்பும் பயணிகள் வசதிக்காக, சென்னையில் இருந்து மதுரைக்கு முன்பதிவில்லா சிறப்பு ரெயில் இயக்கப்படுகிறது. போத்தனூருக்கும் சிறப்பு ரெயில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை எழும்பூரில் இருந்து (ஏப்.22) இரவு 11.55 மணிக்கு சிறப்பு ரெயில் (06179) புறப்பட்டு, மறுநாள் காலை 9.30 மணிக்கு போத்தனூரை சென்றடையும். இந்த ரெயில் பெரம்பூர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை, சேலம், ஈரோடு, திருப்பூர் வழியாக போத்தனூரை அடையும்.

சென்னை எழும்பூரில் இருந்து (ஏப்.22) இரவு 9.55 மணிக்கு முன்பதிவில்லாத மெமு சிறப்பு ரெயில் (06161) புறப்பட்டு, மறுநாள் காலை 8.45 மணிக்கு மதுரையை சென்றடையும்.

இந்த ரெயில் தாம்பரம், செங்கல்பட்டு, மேல்மருவத்தூர், விழுப்புரம், பண்ருட்டி, கடலூர் துறைமுகம், சிதம்பரம், சீர்காழி, மயிலாடுதுறை, பேரளம், திருவாரூர், நீடாமங்கலம், தஞ்சாவூர், திருச்சி, மணப்பாறை, திண்டுக்கல், கொடைக்கானல் ரோடு வழியாக மதுரையை சென்றடையும்.

மதுரையில் இருந்து ஏப்.23ம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு மெமு முன்பதிவில்லாத விரைவு ரெயில் (06162) புறப்பட்டு, அதேநாள் இரவு 11 மணிக்கு தாம்பரத்தை வந்தடையும். இந்த ரெயில் கொடைக்கானல் ரோடு, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, அரியலூர், விருத்தாசலம், விழுப்புரம், செங்கல்பட்டு வழியாக தாம்பரத்தை வந்தடையும்.

எழும்பூர் –போத்தனூர் சிறப்பு ரெயிலுக்கான (06179) டிக்கெட் முன்பதிவு இன்று (ஏப்.22) காலை 8 மணிக்கு தொடங்கியது. இத்தகவல் தெற்கு ரெயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஓட்டுப்பதிவின் போது

# சிறு தவறு நடந்தாலும் கடும் நடவடிக்கை

## கண்காணிப்பு கேமரா சிறிது நேரம் தடைபட்டாலும் மறு வாக்குப்பதிவு

**சென்னை, ஏப்.23–**

ஓட்டுப்பதிவின் போது சிறு தவறு நடந்தாலும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது. அதன்படி கண்காணிப்பு கேமரா சிறிது நேரம் இயங்காவிட்டாலும் அந்த மையத்தில் மறு வாக்குப்பதிவு நடைபெறும். தமிழகத்தில் 234 தொகுதிகள் உள்ளன. மொத்தம் 75,064 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை மாவட்டத்தில் உள்ள 16 தொகுதிகளில் 4,085 மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த வாக்குச்சாவடி மையங்கள் அனைத்திலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. வாக்குப்பதிவு நடைமுறைகள் அனைத்தும் வீடியோவாக பதிவு செய்யப்படுகின்றன. இந்த கேமராக்கள் சில வினாடி நேரம் தடைபட்டால் கூட சம்பந்தப்பட்ட மையங்களில் மறு வாக்குப்பதிவுக்கு உத்தரவிடப்படும் என்று தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது. மேலும் வாக்குச்சாவடி சூறை, ஓட்டு எந்திரம் மீது தாக்குதல், கள்ள ஓட்டுப் போடுதல் போன்ற ஏதாவது ஒரு தவறு நடந்தாலும் சம்பந்தப்பட்ட தொகுதி முழுவதுமான ஓட்டு எண்ணிக்கைநிறுத்திவைக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார்நேற்றுஒருசுற்றறிக்கை அனுப்பியுள்ளார். அதில் அவர் பல அறிவுரைகளை வழங்கியுள்ளார். தேர்தல் முறையாக நடைபெறுவதை உறுதி செய்வோம். முறைகேடுகளை கட்டுப்படுத்தி வாக்காளர்களின் நம்பிக்கையை பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

முறைகேடு விவகாரத்தில் பூஜ்ஜிய சகிப்புத் தன்மையை காட்ட வேண்டும். அரசு ஊழியர்கள் யாரும் தேர்தல் செயல்பாட்டில் தலையிடக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக மேற்கு வங்கத்தை சுட்டிக்காட்டி கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

### பஹல்காம் தாக்குதல் நினைவு நாள்

# எந்த வடிவிலான தீவிரவாதத்திற்கும் இந்தியா அடிபணியாது

## பிரதமர் மோடி திட்டவட்டம்



**டெல்லி, ஏப்.23**

தீவிரவாதத்திற்கு இந்தியா ஒருபோதும் அடிபணியாது என்று பிரதமர் மோடி கூறி இருக்கிறார். கடந்த ஆண்டு ஏப்ரல் 22, 2025 பாகிஸ்தான் ஆதரவுடன் பஹல்காமில் நிகழ்த்தப்பட்ட தீவிரவாத தாக்குதல் நினைவு தினத்தை முன்னிட்டு, தாக்குதலில் உயிரிழந்த 26 பேருக்கு பிரதமர் நரேந்திர மோடி அஞ்சலி செலுத்தினார்.

எந்த வடிவில் பயங்கரவாதம் இருந்தாலும் அதை எதிர்த்துப் போராடுவதில் இந்தியா உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருப்பதாக பிரதமர் மோடி கூறி இருக்கிறார். X தளத்தில் பதிவிட்டிருக்கும் போஸ்ட் ஒன்றில், பிரதமர் பஹல்காம் தாக்குதலில் உயிரிழந்த அப்பாவிகளின் குடும்பங்களுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்ததோடு, நாடு அவர்களின் துயரத்தில் பங்கெடுக்க ஒன்றுபட்டு நிற்பதாகவும், "பயங்கரவாதிகளின் கொடூரமான திட்டங்களை" முறியடிப்பதில் உறுதியாக இருப்பதாகவும் உறுதிப்படுத்தினார்.

பிரதமர் மோடி தனது சமீபத்திய எக்ஸ் பதிவில், "கடந்த ஆண்டு இதே நாளில், பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் பலியான அப்பாவி உயிர்களை நினைவுகூர்கிறேன்.

அவர்கள் ஒருபோதும் மறக்கப்பட மாட்டார்கள். இந்த இழப்பைத் தாங்கிக்கொண்டு மீண்டு வர முயலும் துயருற்ற குடும்பங்களுடனும் எனது எண்ணங்கள் துணை நிற்கின்றன. ஒரு தேசமாக, துயரத்திலும் உறுதியிலும் நாம் ஒன்றுபட்டு நிற்கிறோம்.

எந்த வடிவத்திலான தீவிரவாதத்திற்கும் இந்தியா ஒருபோதும் பணியாது. பயங்கரவாதிகளின் இழிவான சதித் திட்டங்கள் ஒருபோதும் வெற்றி பெறாது," என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

இதனிடையே ஒன்றிய பாதுகாப்புதுறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தனது எக்ஸ் பதிவில், "இந்திய மக்களுக்குத் தீங்கு விளைவிக்க ஏதேனும் முயற்சி மேற்கொள்ளப்பட்டால், இந்தியா வலிமையுடனும் தெளிவுடனும்பதிலடிகொடுக்கும். கடந்த ஆண்டு பஹல்காமில் நடந்த கோழைத்தனமான பயங்கரவாதத் தாக்குதலில் தங்கள் உயிரை இழந்த அப்பாவி மக்களை நினைவுகூர்ந்து, அவர்களுக்கு எனது மனமார்ந்த அஞ்சலியைச் செலுத்துகிறேன்.

இந்தியா பல தசாப்தங்களாக எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைச் சகித்து வந்துள்ளது, ஆனால் தற்போது நமது பதிலடி உறுதியானதாகவும், தீர்க்கமானதாகவும், அசைக்க முடியாததாகவும் உள்ளது.

நமது மக்களுக்குத் தீங்கு விளைவிக்கவோ அல்லது நமது ஒற்றுமையைக்குலைக்கவோசெய்யப்படும் எந்தவொரு முயற்சிக்கும் வலிமையுடனும் தெளிவுடனும் பதிலடி கொடுக்கப்படும் என்பதை உறுதியான நடவடிக்கை மூலம் நிரூபித்துள்ளோம்" என்று பதிவிட்டு உள்ளார்

# ஏவுகணைக்கான ரசாயனத்தை ஈரானுக்கு அனுப்பிய சீனா

## அமெரிக்க குடியரசு கட்சி நிர்வாகி ஆதாரங்களை வெளியிட்டார்

**வாஷிங்கடன், ஏப்.23**

ஏவுகணைகள் தயாரிக்க உதவும் ரசாயனங்களை ஈரானுக்கு சீனா அனுப்பியுள்ளது என்று அமெரிக்காவிலுள்ள குடியரசுக் கட்சியின் நிர்வாகி நிக்கி ஹாலே தெரிவித்துள்ளார்.

மேலும் இதற்கான ஆதாரங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்து முடங்கியுள்ளது. இந்நிலையில் அமெரிக்காவுக்கான ஐ.நா. தூதராக பணியாற்றியவரும், தற்போது அதிபர் டொனால்டு டிரம்ப் சார்ந்த குடியரசு கட்சியின் நிர்வாகியுமான நிக்கி ஹாலே எக்ஸ் சமூக வலைதளத்தில் சில ஆதாரங்களை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது: சிறை பிடிக்கப்பட்ட கப்பலில் இருந்து ஏவுகணைகள் தயாரிக்க பயன்படுத்தப்படும் மிக முக்கியமான ரசாயனங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது சீனாவிலிருந்து ஈரானுக்கு ரகசியமாக அனுப்பி வைக்கப்பட்டவை. இதுதொடர்பான சில புகைப்ப டங்கள் மற்றும் ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளேன்.

ஈரான் தனது ரகசியத் திட்டங்களை மறைப்பதற்காக சீனாவைப் பயன்படுத்திக் கொள்கிறதா என்ற கேள்வி எழுகிறது. கப்பலில் இருந்த ரசாயனப் பொருட்கள் சீன நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டதற்கான முத்திரைகள் இருக்கின்றன. இதன் மூலம் உலக நாடுகளை ஈரான் ஏமாற்றி வருகிறது.

ஈரானின் இந்த நடவடிக்கை அணுசக்தி ஒப்பந்தத்தை மீறுவது மட்டுமல்லாமல், உலக அமைதிக்கே ஒரு மிகப் பெரிய சவாலாக உள்ளது. அமெரிக்காவின் நட்பு நாடுகளை அச்சுறுத்தும் வகையில் ஈரான் தனது ஏவுகணைத் திட்டத்தை வலுப்படுத்தி வருவதை அமெரிக்கா ஒருபோதும் அனுமதிக்காது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இந்த அதிரடி சோதனை மற்றும் கப்பல் சிறைபிடிப்பு நடவடிக்கைக்கு ஈரான் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், நிக்கி ஹாலேயின் இந்த அறிவிப்பு ஈரான் நாட்டுக்கு மேலும் நெருக்கடியை கொடுத்துள்ளது.

அதே நேரத்தில், அமெரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டுகளை ஈரான் முற்றிலும் மறுத்துள்ளது. அமெரிக்கா திட்டமிட்டு ஒரு நாடகத்தை அரங்கேற்றி வருவதாகவும், அந்தக் கப்பலில் சாதாரணமான வணிகப் பொருட்கள் மட்டுமே இருந்ததாகவும் ஈரான் தரப்பில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

நிக்கி ஹாலேவின் கூற்றுக்கு சீன நாடும் மறுப்பு தெரிவித்துள்ளது.



### காரைக்குடியில்

# அ.ம.மு.க. சார்பில் வாக்குக்கு பணம் கொடுத்த 3 பேர் கைது

## ரூ.13 லட்சத்து 85 ஆயிரம் பறிமுதல்

**காரைக்குடி, ஏப்.23–**

காரைக்குடி பொதுப்பணித்துறை அலுவலகம் அருகே வாக்குக்கு பணம் கொடுப்பதாக காரைக்குடி வடக்கு போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

காரைக்குடி வடக்கு சார்பு ஆய்வாளர் பழனிகுமார் தலைமையிலான போலீசார் சென்ற போது வாக்காளர்களுக்கு காரில் வந்து பணம் கொடுத்து கொண்டிருந்த, மணிகண்டன் வயது 32, மாரிமுத்து வயது 35, சாலமன் வயது 35, ஆகிய மூன்று பேரும் போலீசரைப் பார்த்ததும் தப்பி ஓடினர். அவர்களை விரட்டி சென்று பிடித்து கைது செய்து அவர்களிடம் இருந்து ரூ13,85,000 பணம் மற்றும் சொகுசு கார்,இரண்டுடூவீலர்களை பறிமுதல் செய்து தேர்தல் பறக்கும் படை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். இவர்கள் அம்மா மக்கள் முன்னேற்ற கழக வேட்பாளருக்கு ஆதரவாக வாக்காளர்களுக்கு பணப்பட்டுவாடா செய்தது தெரிய வந்துள்ளது.

### தேர்தல் நடக்கவுள்ள நிலையில்

# வீடு வீடாக வாக்குச் சீட்டு வழங்கும் கட்சி முகவர்கள்

## தி.மு.க., அ.தி.மு.க.வினர் தீவிரம்

**சென்னை, ஏப்.23**

தமிழக சட்டசபை தேர்தல்பணிகளில்வாக்குச்சாவடி நிலை முகவர்கள் தீவிரம் காட்டி வருகிறார்கள். மேலும் அவர்கள் வீடுவீடாகச் சென்று வாக்கு சாவடி சீட்டுகளை விநியோகித்து வருகிறார்கள்தமிழக சட்டசபை தேர்தல் பிரசாரம் முடிந்தது. இந்த நிலையில் முக்கிய அரசியல் கட்சிகளின் செயல்பாடுகள் அந்தந்த பகுதிகளைச் சுற்றி நடந்து வருகிறது. வாக்குப்பதிவு முடியும் வரை, பெரும்பாலான பணிகள் வாக்குச்சாவடி மட்டத்திலேயே நடைபெறுகின்றன. அங்கு, முகவர்களும் தன்னார்வலர்களும் ஒன்றாக இணைந்து வீடு வீடாகச் சென்று வாக்குச் சாவடி சீட்டுகளை விநியோகித்து, வாக்காளர்கள் எவ்விதத் தடங்கலும் இன்றி வாக்குச்சாவடிகளை அடைந்து வாக்களிப்பதை உறுதிசெய்து வருகின்றனர். தமிழ்நாட்டில் தேர்தல் நேரத்தில் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் , பதிவு போன்றவற்றில் உதவுவதற்காக, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளால் நியமிக்கப்பட்ட 273,000க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்களைக் கொண்ட ஒரு குழு உள்ளது. சென்னையில் மட்டும் 1,197 இடங்களில் 4,085 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு ள்ளன. தமிழகத்தில் அதிகபட்சமாக 68,251 வாக்குச்சாவடி முகவர்களைக் கொண்ட கட்சி திமுக ஆகும். அதனைத் தொடர்ந்து அதிமுக 66,863 முகவர்களையும், பாஜக 61,438 முகவர்களை யும் கொண்டுள்ளன. இது குறித்து திமுக கவுன்சிலர் ஒருவர் கூறியதாவது, ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 10 தன்னார்வலர்கள் வாக்குச்சாவடி அளவில் குழுவாக உள்ளனர். ஒரு தன்னார்வலர் 50 வாக்காளர்களைக் கவனிப்பார். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்காளர் பட்டியல்களைச்சரிபார்ப்பதே இவர்களின் பணியாகும். இந்தத் தன்னார்வலர்கள், மக்களுக்கு வரிசை எண்களைக் கண்டறிய உதவுவார்கள், மேலும் தேவைப்பட்டால் முதியவர்களுக்கும் உதவுவார்கள். இந்தத் தன்னார்வலர்கள், தெருக்களில் உள்ள மேசைகளில் சுவரொட்டிகளுடன் அமர்ந்திருப்பார்கள். இதில் பூத்லெவல் ஏஜென்ட் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறார். அவர் கட்சியின் மாவட்டச் செயலாளர் ஆவார், ஓரணியில் தமிழ் நாடு போன்ற பல்வேறு கட்சிக்குள்ளான முன்னெடுப்புகளின் கீழ், வாக்காளர் பட்டியல்களை ஆய்வு செய்வது, வாக்காளர்களிடம் நடக்கும் முறைகேடுகளைக் கண்டறிவது, அத்துடன் கண்காணிப்பது எப்படி என்பது குறித்து எங்களுக்குக் கடுமையான பயிற்சி அளிக்கப் பட்டுள்ளதால், நாங்கள் பெரும்பாலும் திமுக உறுப்பினர்களை மட்டு மேபூத் லெவல் ஏஜெண்டாக நியமிக்கிறோம், மேலும், கூட்டணிக் கட்சியினர் பெரும்பாலும் மக்களுக்கு உதவுவதற்காகத் தன்னார்வலர்களாக வெளியே பணியமர்த்தப்படுகிறார்கள். இவ்வாறு அவர்கூறினார். அதிமுக நிர்வாகி ஒருவர் கூறியதாவது, வாக்காளர் பட்டியல்களைச் சரிபார்த்தல் மற்றும் வாக்காளர்களுக்கு உதவுதல் போன்ற பணிகள் கூட்டணிக் கட்சிகளுக்கு விட்டுக்கொடுக்கப்பட்டுள்ளது. சென்னையில், பாஜக மற்றும் பாமகவில் குறைவான தொண்டர்களே உள்ளனர்.

எனவே, வாக்குச்சாவடி மற்றும் களப்பணிகள் அனைத்தையும் அதிமுகவே கவனித்துக்கொள்கிறது, பத்து ஆண்டுகளுக்கு முன்புவரை, இதுபோன்ற பணிகளுக்கான பயிற்சிகளை நாங்கள் பெற்று வந்தோம். இப்போது, அதை மற்ற உறுப்பினர்களுக்குக் கற்றுக் கொடுத்துள்ளோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



காரைக்குடி குளோபல் மிஷன் மருத்துவமனை மற்றும் ஜோஹோ கார்ப்பரேஷன் இணைந்துஜி.எஸ்.மெடிபியூசன்சிஸ்டம்என்றபுரிந்துணர்வுஒப்பந்தத்தைஏற்படுத்தியது. இதில் குளோபல் மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மைய சேர்மன் குமரேசன், ஜோஹோ இயக்குனர் பாலகிருஷ்ணன், ஜோஹோ சுகாதாரதுறை மற்று தொழில்நுட்ப இயக்குனர் அமுல்ராஜ் பேச்சிமுத்து பங்கேற்றனர்.

### காரைக்குடி

# குளோபல் மிஷின் மருத்துவமனை - ஜோஹோ கார்ப்பரேஷன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

**காரைக்குடி, ஏப்.23–**

காரைக்குடி குளோபல் மிஷன் மருத்துவமனை மற்றும் ஜோஹோ கார்ப்பரேஷன் இணைந்து ஜி.எஸ்.மெடி பியூசன் சிஸ்டம் என்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது. இதன் மூலம் ஜோஹோ ஹெல்த் கேர் மூலம் நோயாளி பராமரிப்பு மற்றும் மருத்துவமனை செயல்பாடுகளை மேம்படுத்தும் ஒருங்கிணைந்த டிஜிட்டல் சூழலை உருவாக்கும் நோக்கத்துடன் அமைந்துள்ளது.

மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறையில் டிஜிட்டல் மாற்றம் மிகவும் அவசியமாகிவரும் நிலையில், குளோபல் மெஷின்மருத்துவமனை ஜோஹஹ தனது தொழில்நுட்ப கூட்டாளியாகத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த திட்டம் 40+ கிளினிக்குகள், தற்போதைய மல்டிஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகள் மற்றும் 2027க்குள் நிறைவடைய இருக்கும் இரண்டுசூப்பர்ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகளையும் உள்ளடக்கும்.

இந்த முயற்சி நோயாளி ஈடுபாட்டை மேம்படுத்தவும், பணிச்சூழல்களை எளிமைப்படுத்தவும், அனைத்து மையங்களிலும் பணியாளர் திறனை அதிகரிக்கவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் குளோபல் மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மைய சேர்மன் குமரேசன், ஜோஹோ இயக்குனர் பாலகிருஷ்ணன், ஜோஹோ சுகாதாரதுறை மற்று தொழில் நுட்ப இயக்குனர் அமுல்ராஜ் பேச்சிமுத்து ஆகியோர் பங்கேற்றனர்.

### விசில் அடிப்போரை தியேட்டருக்கு அனுப்புங்கள்:

# தி.மு.க.வை பலவீனப்படுத்தவே விஜய் களம் இறக்கப்பட்டார்

## திருமாவளவன் விமர்சனம்

**சென்னை,ஏப்.23–**

"விசில் அடிப்பவர்களைத் திரையரங்குகளுக்கு அனுப்புங்கள். சினிமா மோகத்தில் மயங்குபவர்கள் சிறுத்தைகள் அல்ல" என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரத்தின் இறுதி நாளான நேற்று விசிக தலைவர் திருமாவளவன் காட்டுமன்னார்கோவில்தொகுதி குமராட்சிபகுதியில்விசிக வேட்பாளர் ஜோதிமணிக்கு ஆதரவாக வாக்குச் சேகரித்தார்.

அப்போது அவர் பேசியதாவது: இன்றுள்ள அதிமுக ஜெயலலிதாவின் அதிமுக அல்ல. அது மோடியின்அதிமுக. அதே போல் அன்புமணி தலைமையிலான பாமக–வும் மோடியின் பாமக–தான். நீங்கள் பாமகவுக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் நேரடியாக பாஜகவுக்கே செல்லும்.

சாதிஉணர்வைத்தூண்டி உங்களிடம் ஓட்டு வாங்குபவர்களிடம் ஏமாறாதீர்கள். விசில் அடிப்பவர்களைத் திரையரங்குகளுக்கு அனுப்புங்கள். சினிமா மோகத்தில் மயங்குபவர்கள் சிறுத்தைகள் அல்ல. விஜய்க்குப் போடும் ஓட்டு பாஜகவுக்குப் போடுவதாகவே அர்த்தம். திமுகவை பலவீனப் படுத்தவே அவர் களமிறக்கப்பட்டுள்ளார்.

இதன் பின்னணியில் மோடி மற்றும் அமித் ஷா ஆகியோரின் மூளை செயல்படுகிறது. காட்டுமன்னார்கோவில் சிறுத்தைகளின் தாய்மடி என்பதை நிரூபிக்கும் வகையில், ஜோதிமணியை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

### ஜே.இ.இ. 2–ம் கட்ட முதன்மைத் தேர்வு

# தமிழக மாணவர் தமினா கிரிஷ் முழு மதிப்பெண் பெற்று சாதனை

## மேலும் 13 பேர் சாதனை படைத்தனர்

**சென்னை, ஏப். 23–**

நம்நாட்டில் ஐ.ஐ.டி., என்.ஐ.டி. போன்ற மத்திய உயர்கல்வி நிறு வனங்களில் இளநிலை படிப்புகளில் சேர ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வில் (ஜே.இ.இ.) தேர்ச்சி பெற வேண்டும். இவை ஜே.இ.இ. முதன்மைத் தேர்வு, பிரதானத் தேர்வு என இரு பிரிவாக நடைபெறும்.

இதில் முதன்மைத் தேர்வானது தேசிய தேர்வுகள் முகமை (என்.டி.ஏ.) சார்பில் ஆண்டுதோறும் 2 கட்டங்களாக நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி 2026–27–ம் கல்வியாண்டுக்கான ஜே.இ.இ. முதல் கட்ட முதன்மை தேர்வு ஜனவரி 21 முதல் 28–ம் தேதி வரை நடத்தப்பட்டது. இந்த தேர்வை சுமார் 13 லட்சம் பேர் எழுதினர். இதன் முடிவுகள் பிப்ரவரி 16–ம் தேதி வெளியிடப்பட்டன.

இதைத் தொடர்ந்து ஜே.இ.இ. 2–ம் கட்டத் தேர்வு ஏப்ரல் 2 முதல் 8–ம் தேதி வரை நடைபெற்றது. இந்த தேர்வை நாடு முழுவதும் 584 மையங்களில் 10 லட்சத்து 34,330 மாணவர்கள் எழுதினர். அதற்கான தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் இரவு வெளியானது. மாணவர்கள் https://jeemain.nta.nic. in/ என்ற இணையதளத்தில் சென்று தங்கள் தேர்வு முடிவுகளை அறியலாம். இந்த தேர்வில் மொத்தம் 14 பேர் முழு மதிப்பெண் பெற்று சாதனை படைத்துள்ளனர். தமிழகத்தில் மாணவர் தமினா கிரிஷ் முழு மதிப்பெண் பெற்றுள்ளார். இதுகுறித்த கூடுதல் விவரங்களை www.nta.ac.in என்ற இணையதளத்தில் அறியலாம். ஏதேனும் சந்தேகம் இருப்பின் மாணவர்கள் 011–40759000/69227700 என்ற தொலைபேசி எண் அல்லது jeemain@nta.ac.in எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம் என்று என்.டி.ஏ. வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது. இவ்விரு தேர்வுகளில் மாணவர்கள் பெற்ற அதிக மதிப்பெண் அடுத்தகட்ட ஜே.இ.இ. பிரதானத் தேர்வுக்கு கணக்கில் கொள்ளப்படும். பிரதானத் தேர்வு மே 17–ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கு தகுதியான நபர்கள் ஏப்ரல் 23 முதல் மே 2–ம் தேதி முதல் விண்ணப்பிக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.



பழனியில்தனியார்தங்கும்விடுதிகளில்டிஎஸ்பிதனஞ்செயன்தலைமையில், வெளி ஆட்கள் யாரும் தங்கி உள்ளார்களா என போலீசார் சோதனை செய்தனர்

### வாக்குப்பதிவான நாளை

# 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள்,மாற்றுத்திறனாளிகள் நகர பஸ்களில் இலவசமாக பயணிக்கலாம்

## தேனி கலெக்டர் தகவல்

**தேனி,ஏப்.23**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026க்கான வாக்கு பதிவு 23.04.2026 அன்று நடைபெற இருப்பதை ஒட்டி இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி, வாக்குப்பதிவு நாளன்று அனைத்து வாக்காளர்களும் சிரமமின்றி வாக்களிக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒருபகுதியாக எந்தவொரு வாக்காளரும் விடுபட்டு விடக்கூடாது என்பதற்காகவும், வாக்குச்சா வடிகளில் சிரமமின்றி வாக்களிப்பதற்காகவும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் வாக்குப்பதிவு நாளான 23.04.2026 அன்று காலை 06.00 மணி முதல் மாலை 07.00 மணி வரை 60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், பார்வை குறைபாடு மற்றும் அனைத்து மாற்றுத்திறனாளிகளும் சாதாரண நகரப் பேருந்துகளில் இலவசமாக வாக்குச்சாவடிகளுக்கு வாக்களிக்கச் சென்று வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி தேனி மாவட்டத்தில் உள்ளவர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம் என மாவட்ட கலெக்டர் ரஞ்ஜீத் சிங் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

### சிங்கம்புணரியில்

# வீட்டில் பதுக்கி வைத்திருந்த 350 மது பாட்டில்கள் பறிமுதல்

**சிங்கம்புணரி , ஏப், 23**

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி மேலத்தெரு பகுதியில் உள்ள வீட்டில் மது பாட்டில்கள் பதுக்கி வைக்கப்பட்டி ருப்பதாக சிங்கம்புணரி காவல் நிலையத்திற்கு ரகசிய தகவல் அடிப்படையில் மேலத் தெரு பகுதியில் உள்ள சேக்கு மகன் ரவி 56 என்பவரின் வீட்டில் சிங்கம்புணரி காவல் ஆய்வாளர் தயாளன் தலைமையிலான போலீசார் சோதனை செய்தனர்.



சோதனையில் வீட்டில் 350 மது பாட்டில்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. அதனை தொடர்ந்து சிங்கம்புணரி போலீசார் பதுக்கிவைக்கப் பட்டிருந்த மது பாட்டில்களை கைப்பற்றினர்.

தேர்தலுக்காக வழங்கப்படுவதற்கு பதுக்கி வைக்கப் பட்டதா அல்லது கூடுதல் விலைக்கு விற்க பதுக்கி வைக்கப்பட்டதா என்பது குறித்துசிங்கம்புணரி போலீசார் விசாரணை செய்து வருகின்றார்கள்.

சட்ட விரோதமாக மது பாட்டில் பதுக்கி வைத்திருந்த மேலத்தெரு ரவியை சிங்கம்புணரி போலீசார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

மெட்ராஸ் மணி
MADRAS MANI · DAILY TAMIL · PUBLISHED FROM - CHENNAI
ஏப்ரல் 23 2026 வியாழக்கிழமை

# "தமிழகத்தின் ஆன்மாவை ஸ்டாலின் குடும்பம் சிதைத்து விட்டது" - பியூஷ் கோயல் கடும் தாக்கு

தமிழகத்தின் ஆன்மாவை ஸ்டாலின் குடும்பம் சிதைத்து விட்டது என்று மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் கூறியதாவது: தமிழக மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள் என்பது இந்தத் தேர்தல் களத்தில் ஆணித்தரமாக உறுதியாகிவிட்டது. திமுக மற்றும் காங்கிரஸ் கட்சிகள், மக்கள் நலனுக்காகப் பாடுபடும் கட்சிகள் அல்ல.

அவை ஸ்டாலின் குடும்பத்தாலும், காந்தி குடும்பத்தாலும் நடத்தப் படும் 'பிரைவேட் லிமிடெட்' நிறுவனங்கள். இத்தகைய வாரிசு அரசியல் கலாச்சாரத்தை தமிழக மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். தமிழகத்தின் இன்றைய பின்னடைவுக்கு இந்த இரண்டு குடும்பங்களே முழு முதற்காரணம்.

திமுக அரசு ஊழலில் திளைக்கிறது. வளர்ச்சிப் பணிகளுக்காகக் கருவூலத்தில் ஒரு பைசாவைக் கூட இவர்கள்மிச்சம்வைக்கவில்லை. ஸ்டாலின், உதயநிதி, சபரீசன் மற்றும் கனிமொழி என இந்தக் குடும்பத்தினர் தமிழகத்தின் ஆன்மாவையே சிதைத்துவிட்டனர். சனாதன தர்மத்தை டெங்கு போன்றது என விமர்சிப்பதன் மூலம், உதயநிதி ஸ்டாலின் தமிழகத்தின் தொன்மையான பண்பாட்டையும் ஆன்மீகச்சிந்தனையையும் நேரடியாகத் தாக்குகிறார். தேர்தலுக்காகக் கோயில்களுக்குச் செல்வதால் மட்டும் உங்கள் பாவங்களைக் கழுவிவிட முடியாது.

மக்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதமரை, 'பயங்கரவாதி' என்று அழைக்கும் அளவுக்கு திமுகவும் காங்கிரஸும் தரம் தாழ்ந்து விட்டன. மல்லிகார்ஜுன கார்கேயின் இந்த வன்மமான பேச்சை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

உதயநிதி ஸ்டாலினை அடுத்த முதல்வராக்க ஸ்டாலின் துடிக்கிறார். தமிழ் கலாச்சாரத்துக்கு எதிராகப் பேசுபவரைத் துணை முதல்வராக்கியுள்ளனர். தமிழக மக்களே, உங்கள் எதிர்காலத்தையும் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் பாதுகாக்க வேண்டிய நேரம் இது. வாரிசு அரசியலை வீழ்த்துவோம், வளர்ச்சியைத் தேர்ந்தெடுப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

### அ.தி.மு.க. வேட்பாளருக்கு ஆதரவாக

# தேர்தல் பிரசாரம் செய்த காவலர் பணியிடை நீக்கம்

## போலீஸ் எஸ்.பி. உத்தரவு

**கோவில்பட்டி, ஏப்.23**

கோவில்பட்டி காவலர் குடியிருப்பில் அ.தி.மு.க, வேட்பாளர்கடம்பூர் செ. ராஜுவுக்கு ஆதரவாக பிரசாரம் செய்ததாக காவலரை பணியிடை நீக்கம் செய்து எஸ்.பி. சி.மதன் உத்தரவிட்டுள்ளார்.

கோவில்பட்டி கிழக்கு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருபவர் முதல்நிலை காவலர் சபரிகுமார் (33). இவர் கிழக்கு காவல் நிலைய ஆய்வாளரின் வாகனத்தின் ஓட்டுநராக பணியாற்றி வந்தார்.

கடந்த 2012–ஆம் ஆண்டு காவலர் பணியில் சேர்ந்த இவர் தற்போது கோவில்பட்டி காவலர் குடியிருப்பில் குடியிருந்து வருகிறார். கடந்த சில நாள்களாக குடியிருப்புகளில் உள்ள போலீஸார், அவர்கள் குடும்பத்தினரிடம் அ.தி.மு.க. வேட்பாளர் கடம்பூர் செ.ராஜுவுக்கு வாக்களியுங்கள் என்று பிரசாரம் மேற்கொண்டு வந்ததாகக் கூறப்படுகிறது.

இது குறித்து காவல்துறை அதிகாரிகளுக்கு தெரியவந்துள்ளது. இதையடுத்து விசாரணை மேற்கொள்ள மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சி.மதன் உத்தர விட்டார்.

விசாரணையில் வேட்பாளர் கடம்பூர் செ.ராஜுவுக்கு ஆதரவாக சபரிகுமார் பிரசாரம் செய்தது தெரியவந்ததையடுத்து, அவரை பணியிடை நீக்கம் செய்து எஸ்.பி. உத்தரவிட்டார். மேலும், அவர் மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட் டுள்ளது.

### உசிலம்பட்டி அருகே

# அண்ணன் – அண்ணி வெட்டிக்கொலை

## போதையில் வாலிபர் வெறிச்செயல்

**உசிலம்பட்டி, ஏப்.23–**



மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே கீரிபட்டியைச்சேர்ந்தவர்கள் பழனி ஈஸ்வரி தம்பதி., வட மாநிலத்தில் முறுக்கு வியாபாரம் செய்து வருகின்றனர். பழனிக்கும் அவரது தம்பி சுப்பிரமணிக்கும் இடையே குடும்ப தகராறு காரணமாக அடிக்கடி பிரச்சினைகள் ஏற்பட்டு வந்ததாக கூறப்ப டுகிறது. இந்நிலையில் நேற்று மது போதையில் பழனி வீட்டிற்குவந்தசுப்பிரமணி வீட்டில் இருந்த அவரது அன்னி ஈஸ்வரியை சரமாறியாக வெட்டி படுகொலை செய்தார்.,

அங்கிருந்து கிராமத்தின் மந்தைக்கு வந்த சுப்பிரமணி அங்கு அமர்ந்திருந்த அவர து அண்ணன் பழனியை வெட்டி படுகொலை செய்தார். இருவரையும் வெட்டும் போது தனது கால் மற்றும் தலை பகுதியில் தனக்கு தானே சுப்பிரமணி வெட்டிக் கொண்ட சூழலில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தகவலறிந்து விரைந்து வந்த உசிலம்பட்டி தாலுகா காவல் நிலைய போலீசார் படுகொலை செய்யப்பட்ட கணவன் மனைவி இருவரின் உடல்களையும் மீட்டு உடற்கூறாய்விற்காக உசிலம்பட்டிஅரசுமருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விட்டு தொடர் விசாரணை நடத்தி வருகின்றனர்.,



களக்காட்டில் விவசாயிகளுடன் வனச்சரகர் பிரபாகர் தலைமையில் பேச்சுவார்த்தை நடந்தது.

### களக்காட்டில்

# விவசாயிகளுடன் வனத்துறையினர் பேச்சுவார்த்தை

## தேர்தல் புறக்கணிப்பு வாபஸ்

களக்காடு, ஏப்.23

களக்காடு பகுதியில் வனவிலங்குகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்த வேண்டும், வனவிலங்குகளால் நாசமான பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், விளைநிலங்களை நாசம் செய்யும் காட்டுபன்றிகளை சுடும் பணிகளை விரைவு படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி களக்காடு பகுதி விவசாயிகள் சட்டமன்ற தேர்தலை புறகணிக்கப்போவதாக விவசாயிகள் பாதுகாப்பு சங்க வட்டார தலைவர் தாவீது கடந்த சில நாட்களுக்கு முன்பு அறிவித்திருந்தார்.

இதுகுறித்து போஸ்டர்களும் ஒட்டப்பட்டன. இதையடுத்து களக்காடு புலிகள் காப்பக துணை இயக்குனர்சிசில்கில்பர்ட் உத்தரவின் பேரில், களக்காடு வனச்சரகர் பிரபாகர் தலைமையில் வனத்துறை ஊழியர்கள் விவசாயிகள் கலந்து கொண்ட கூட்டம் நடந்தது.

இதில் வனவர் மதன்குமார் , விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தை சேர்ந்த தமிழ்செல்வன், விவசாயிகள் தாவீது,சில்கிஸ் சாமுவேல் கவுன்சிலர் சிம்சோன் துரை உள்பட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகள் சம்பந்தமாக தேர்தல் முடிந்ததும், துணை இயக்குனர் தலைமையில் தனியாக கூட்டம்நடத்திதீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும் என்று வனத்துறையினர் உறுதி அளித்தனர்.

இதனை தொடர்ந்து தேர்தல் புறக்கணிப்பை வாபஸ் பெறுவதாக விவசாயிகள் அறிவித்துள்ளனர்.

வனவிலங்குகளை கட்டுப்படுத்த நிரந்தர தீர்வு கிடைத்தால் வாழ்க்கைத்தரம் மேம்படுமென விவசாயிகள் தெரிவித்தனர்.

### செய்யாறு அருகே

# த.வெ.க. வேட்பாளர் வீட்டில் பெட்ரோல் குண்டு வீச்சு

செய்யாறு, ஏப்.23

செய்யாறு அருகே, வந்தவாசி தொகுதி தவெக வேட்பாளர் வீட்டில் பெட்ரோல் குண்டு வீசப்பட்டது தொடர்பாக போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

செய்யாறு வட்டம், அனக்காவூர் கிராமம் இந்திரா நகர் காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் உதயகுமார்(33). இவர், தமிழகவெற்றிக்கழகத்தின் (தவெக) திருவண்ணாமலை கிழக்கு மாவட்ட செயலாளராக இருந்து வருகிறார். இவர், தற்போது கட்சி சார்பில் வந்தவாசி (தனி) தொகுதியில் வேட்பாளராக போட்டியிடுகிறார். நேற்று முன்தினம் இரவு வேட்பாளர் உதயகுமார் பிரசாரத்தை முடித்துக் கொண்டு நள்ளிரவில் வீடு திரும்பினார். வீட்டில் அவரது மனைவி சவுந்தர்யா, ஒன்றரை வயது மகன் கீர்த்தீஸ்வரன் ஆகியோருடன் தூங்கியதாகத் தெரிகிறது.

உதயகுமாரின் தாய் மீனா, தேர்தல் பிரசாரத்திற்கு உதவியாக வந்திருந்த உதயகுமாரின் சகோதரிகள் பாரதி, கவுந்தர்யா, அக்காள் மகன் கிஷோர் ஆகியோர் வீட்டு முன் அறையில் படுத்திருந்தனர். நேற்று அதிகாலை சுமார் 2 மணியளவில் வீட்டின் வெளியே பெட்ரோல் கருகிய வாசனை வந்துள்ளது. உதயகுமாரின் தாய் மீனாவெளியே வந்து பார்த்துள்ளார். அப்போது, பெட்ரோல் குண்டு வீட்டின் வாயிற்படி மீது பட்டதால் வாயிற்படியில் மாட்டியிருந்த வெட்டிவேர் மாலை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்த அவர் மகள்களை, மகனை எழுப்பினார். அவர்கள் வந்து தீயை அணைத்தனர்.

அப்போது, வேட்பாளரின் அக்கா பாரதியின் கையில் தீப்பொறி பட்டு தீக்காயம் ஏற்பட்டது. இந்த சம்பவம் குறித்து தவெக வேட்பாளர் உதயகுமார் அனக்காவூர் போலீசில் புகார் அளித்தார். போலீசார் வழ்க்குப் பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### கடலாடி அருகே

# அரசுப்பள்ளியில் 5-ம் வகுப்பு மாணவர்களுக்கு பிரிவுபசார விழா

கடலாடி, ஏப். 23–

ராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஒன்றியம் சாயல்குடி அருகே உள்ள சண்முககுமாரபுரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பை நிறைவு செய்த மாணவர்களுக்கு பிரிவு உபசார விழா நடைபெற்றது.

பள்ளியின் சார்பில் பயனாடை போர்த்தப்பட்டு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. மாணவர்கள் ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினர். பள்ளி வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் சத்துணவு, காலையுணவு, அங்கன்வாடி, சுகாதாரப் பணியாளர்களுக்கு பள்ளியின் சார்பில் நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. மாணவர்கள் ஆறு பேரும் பள்ளியில் வைப்பதற்காக தலைவர்கள் படங்களை வழங்கினார்கள். மாணவர்கள் சார்பில் பா. இவிஷா நன்றி கூறினார். மாணவர்கள் ஆசிரியர்களுக்கும் மற்ற மாணவர்களுக்கும் இனிப்பு வழங்கி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

மாணவர்களுக்கு மதிய உணவாக சிக்கன் பிரியாணி மற்றும் பாயாசம் வழங்கப்பட்டது.

### வாக்காளர்களுக்கு பணம்

# தி.மு.க. பிரமுகர் மீது வழக்கு

சென்னை,ஏப்.23

ராயபுரம் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட வண்ணாரப்பேட்டை சீனிவாசபுரம் ரெயில்வே கேட் அருகே வாக்காளர்களுக்கு தி.மு.க.வினர் பணம் பட்டுவாடா செய்வதாக பறக்கும் படையினருக்கு நேற்று முன்தினம் ரகசியத் தகவல் கிடைத்தது.அதன் அடிப்படையில் பறக்கும் படையினர், அங்கு தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது சந்தேகத்துக்குரிய வகையில் நின்று கொண்டிருந்த ஒரு நபரை பிடித்து விசாரித்தனர். பின்னர் அவர் வைத்திருந்த பையை சோதனையிட்டதில் அதில் ரூ.1 லட்சம் இருந்தது. இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில் அவர், வண்ணாரப்பேட்டை சீனிவாசபுரத்தைச் சேர்ந்த தி.மு.க. பிரமுகர் ரவிக்குமார்(54) என்பதும், அந்தப் பணத்தை வாக்காளர்களுக்கு விநியோகிக்க வைத்திருந்ததும் தெரியவந்தது.

இதையடுத்து பறக்கும் படையினர், அந்த பணத்தை பறிமுதல் செய்து வண்ணாரப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் செய்தனர். அந்த புகாரின் அடிப்படையில் போலீஸார் வழக்குப் பதிந்து, விசாரணை செய்கின்றனர்.

### விருதுநகர் பட்டாசு ஆலை விபத்து:

# நீதிமன்றத்தில் உரிமையாளர் சரணடைந்தார்

சாத்தூர், ஏப். 23

விருதுநகர்அருகேபட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 25பேர்உயிரிழந்தநிலையில், இதுதொடர்பாக போலீசாரால் தேடப்பட்டு வந்த ஆலையின் உரிமையாளர் முத்துமாணிக்கம் விருதுநகர் முதலாவது நீதித்துறை நடுவர்மன்றத்தில் நேற்று சரணடைந்தார்.

விருதுநகர் அருகேயுள்ள கட்டனார் பட்டி பட்டாசு ஆலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட வெடிவிபத்தில் 25 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இதுகுறித்து ஆலையின் உரிமையாளர்களான கோவிந்தநல்லூரைச் சேர்ந்த ஈஸ்வரி,

இவரது கணவர் முத்துமாணிக்கம் ஆகியோர் மீது வச்சக்காரப்பட்டி போலீசார் வழக்குப் பதிந்து, 4 தனிப் படைகள் அமைத்து இவர்களைத் தேடி வந்தனர்.

இந்த நிலையில், போலீசாரால் தேடப்பட்டு வந்த முத்துமாணிக்கம் விருதுநகரில் உள்ள முதலாவது நீதித்துறை நடுவர் மன்றத்தில் சரணடைந்தார். இவரை 15 நாள் நீதிமன்றக்காவலில் வைக்க நீதித்துறை நடுவர் நிஷாந்தினி உத்தரவிட்டார். இதையடுத்து, அவர் விருதுநகர்சிறையில் அடைக்கப்பட்டார். மேலும், இந்த வழக்கில் முத்துமாணிக்கம் தலைமறைவாக இருக்க உதவிய இவரது உறவினர்கள் முத்துராஜ், வைரமுத்து, வெற்றிவேல் முருகன் ஆகிய மூவரையும் வச்சக்காரப்பட்டி போலீசார் கைது செய்தனர்.

25 உடல்களும் ஒப்படைப்பு:பட்டாசுஆலை வெடி விபத்தில் உயிரிழந்த 25 தொழிலாளர்களின் உடல்கள் கூராய்வுக்குப் பிறகு, குடும்பத்தினரிடம் திங்கள் கிழமை இரவு ஒப்படைக்கப்பட்டன. மேலும், இந்த வெடி விபத்தில்

காயமடைந்த 17 பேர் விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

### சுரண்டை அருகே

# எலுமிச்சை தோட்டத்தில் பதுக்கி வைத்த 850 மதுபான பாட்டில்கள் பறிமுதல்

சுரண்டை, ஏப். 23–

தென்காசி மாவட்டம் சுரண்டை அருகே உள்ள சேர்ந்தமரம் பகுதியில், மதுபானக் கடைகள் அடைக்கப்பட்டிருக்கும் நிலையில் கள்ளச் சந்தையில் விற்பனைசெய்ய எலுமிச்சை தோட்டத்திற்குள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 850 மதுபான பாட்டில்களை காவல்துறையினர் பறிமுதல் செய்த



னர்.மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில், கிடைத்த ரகசிய தகவலைத் தொடர்ந்து நள்ளிரவில் நடத்தப்பட்ட அதிரடி சோதனையில், எலுமிச்சை தோட்டத்திற்குள் 17 சாக்கு மூட்டைகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த மதுபானங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மாவட்டம் முழுவதும் மதுபான கடைகள் அடைக்கப்பட்டு இருக்கும் நிலையில் தீவிர சோதனை நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

---

**ICICI Home Finance**

**கார்ப்பரேட் அலுவலகம்:** ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், அந்தேரிட் குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை - 400059, இந்தியா

**கிளை அலுவலகம்:** ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட், அபெக்ஸ் சேம்பர், அலுவலகப் பகுதி எண்.3, 3வது தளம், எண்.20, தியாகராய வீதி, டி நகர், சென்னை - 600017

**தனியார் ஒப்பந்தம் மூலம் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு**

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002-இன் கீழ், பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8(8) மற்றும் விதி 9(1)-ஐ இணைத்துப் படிப்பதன் படி, தனியார் ஒப்பந்தம் மூலம் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்புஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (ஐசிஐசிஐ எச்எஃப்சி), கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானச் சொத்தை விற்பனை செய்வதற்காகப் பல மின்-ஏலங்களை நடத்தியது, இருப்பினும், அத்தகைய அனைத்து மின்-ஏலங்களும் தோல்வியடைந்தன. தற்போது, ஆர்வமுள்ள ஒரு வாங்குபவர், ஐசிஐசிஐ எச்எஃப்சி-யை அணுகி, குறிப்பிட்ட சொத்தை ரூ. 12,00,000/- தொகைக்கு வாங்குவதற்கான ஒரு சலுகையை வழங்கியுள்ளார். ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்-இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் உடைமை எடுக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவருக்கு அடமானம்/பற்று வைக்கப்பட்டுள்ள, கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, கீழே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கமான விவரங்களின்படி, ஒரு தனிப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம், "உள்ளபடியே, இருக்கும் இடத்தில்", "உள்ளபடியே, என்ன உள்ளதோ அப்படியே", மற்றும் "என்ன இருக்கிறதோ அதுவரை" என்ற அடிப்படையில் விற்கப்படும் என்பதை இதன்மூலம் பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கடன் வாங்குபவர்(கள்) மற்றும் உத்தரவாதம் அளிப்பவர்(கள்) ஆகியோருக்கும் அறிவிக்கப்படுகிறது;

| வ எண் | கடன் வாங்கியவர்(கள்)/ கூட்டுக் கடன் வாங்கியவர்கள்/ உத்தரவாதம் அளித்தவர்கள் / சட்டப்பூர்வ வாரிசுகளின் பெயர். கடன் கணக்கு எண். | தெரிந்த சுமைகளுடன் கூடிய பாதுகாக்கப்பட்ட சொத்து(களின்) விவரங்கள், ஏதேனும் இருந்தால் | நிலுவைத் தொகை | இருப்பு விலை / முன்பண வைப்புத் தொகை | சொத்தை ஆய்வு செய்யும் தேதி மற்றும் நேரம் | ஏலத்தின் தேதி மற்றும் நேரம் | ஏலத் தேதிக்கு ஒரு நாள் முன்பு | SARFAESI நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|
| (அ) | (ஆ) | (இ) | (ஈ) | (உ) | (ஊ) | (எ) | (ஏ) | (ஐ) |
| 1. | 1. எஸ். ஜோன் (கடன் வாங்குபவர்) ஆர். தமிழரசி (கூட்டுக் கடன் வாங்குபவர்கள்) லேன் எண். LHANC00001496330 | கதவு எண். 18/C, அரசு 5வது தெரு, நேரு நகர், பழைய டி.எஸ். எண். 96, புதிய டி.எஸ். எண். 96/1, பிளாக் எண். 4, எருக்கஞ்சேரி கிராமம், பெரம்பூர் தாலுகா, சென்னை மாவட்டம், தமிழ்நாடு - 600118 | ரூ.18,34, 648/- ஏப்ரல் 13, 2026 | ரூ.12,00, 000/- / ரூ. 1,20, 000/- | மே 04, 2026 காலை 11:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி வரை | மே 11, 2026 பிற்பகல் 02:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி வரை | மே 08, 2026 பிற்பகல் 04:00 மணிக்கு முன் | நேரடி உடைமை |

இந்த ஆன்லைன் ஏலமானது, எங்களின் ஏல நிறுவனமான வேல்யூ டிரஸ்ட் கேப்பிட்டல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளத்தில் (URL இணைப்பு- https://BidDeal.in) நடத்தப்படும். வருங்கால ஏலதாரர்(கள்) முன்பண வைப்புத்தொகை (EMD) RTGS/டிமாண்ட் டிராஃப்ட் (DD) (பத்தி E-ஐப் பார்க்கவும்)-ஐ, இக்கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கிளை அலுவலக முகவரியில், மே 08, 2026 அன்று மாலை 04:00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். வருங்கால ஏலதாரர்(கள்) பதிவுப் படிவம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் படிவத்தின் கையொப்பமிடப்பட்ட நகலையும், இக்கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கிளை அலுவலக முகவரியில், மே 08, 2026 அன்று மாலை 05:00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். முன்பண வைப்புத்தொகை டிமாண்ட் டிராஃப்ட் (DD), இக்கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிளை அலுவலக முகவரியில் செலுத்தத்தக்க வகையில், "ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - ஏலம்" என்ற பெயரில் ஒரு தேசியமயமாக்கப்பட்ட/பட்டியலிடப்பட்ட வங்கியிலிருந்து எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.பொதுமக்கள், மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆர்வமுள்ள வாங்குபவர் வழங்கும் தொகையை விட அதிகமான ஏலத்தொகையைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கூறிய ஆர்வமுள்ள வாங்குபவர் வழங்கும் தொகையை விட அதிகமான ஏலங்கள் எதுவும் ஐசிஐசிஐ HFC-க்கு வராத பட்சத்தில், அடமானம் வைக்கப்பட்ட சொத்தானது, பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8(8) உடன் விதி 9(1)-ஐயும் சேர்த்துப் படிப்பதன் படி, அந்த ஆர்வமுள்ள வாங்குபவருக்கு விற்கப்படும் என்று இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.பரிசோதனை, விற்பனையின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஏலங்களைச் சமர்ப்பிப்பது தொடர்பான மேலதிக விளக்கங்களுக்கு, தயவுசெய்து ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டை 9920807300 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மேலதிக காரணங்கள் எதையும் தெரிவிக்காமல், எந்தவொரு ஏலத்தையும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்கும் உரிமையைக் கொண்டுள்ளார்.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவுசெய்து https://www.icicihfc.com என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

**தேதி: ஏப்ரல் 23, 2026**
**இடம்: சென்னை**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, "ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்", CIN எண்:- U65922MH1999PLC120106**

---

**SOUTH INDIAN Bank**

**தி சவுத் இந்தியன் பேங்க் லிமிடெட்.**
**கிளை முகவரி:2/356 பஜார் வீதி, மருதாடுதிருவண்ணாமலை மாவட்டம் 604405,**
**கிளை மின்னஞ்சல் முகவரி: br0169@sib.co.in**

**வங்கியில் அடமானம் வைத்தவர்களுக்கான தங்க ஏலம்**

அதே சமயம், தி சவுத் இந்தியன் பேங்க் லிமிடெட்-இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கடன் வாங்கியவர் பெற்ற தங்கக் கடனில் உள்ள நிலுவைத் தொகையைச் செலுத்துமாறு கோரி விற்பனை அறிவிப்புகளை வெளியிட்டார். கடன் வாங்கியவர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கடன் வாங்கியவருக்கும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே கையொப்பமிட்டுள்ள நான், தங்க நகைகளை **"உள்ளபடியே, உள்ளதை வைத்து" மற்றும் "எந்தப் பொறுப்புமின்றி"** என்ற அடிப்படையில் இணையவழி ஏலத்தில் கண்டிப்பாக நடத்துவேன். கடன் வாங்கிய **திரு. சேகர் கண்ணப்பிள்ளை (கணக்கு எண் 0169653000046350)** அவர்களுக்காக, இந்த ஏலம் **30.04.2026 அன்று மதியம் 12:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி வரை https://sibegold.auctiontiger.net** என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் நடத்தப்படும்.

மேலும் தகவல்களுக்கு, ஆக்ஷன் டைகரை 6352632523 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**Sd/- மேலாளர்**
**தி சவுத் இந்தியன் பேங்க் லிமிடெட்.**

---

**Protium**

**புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்**
(முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது.)
**பதிவுசெய்யப்பட்ட & நிறுவன அலுவலக முகவரி: 7வது தளம், பிளாக் B2, கட்டம் I நிர்லான் அறிவு பார்க், பஹாடி கிராமம், மேற்கு எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலைக்கு வெளியே, காமா தொழில்துறை எஸ்டேட், கோரேகான்(கி), மும்பை 400063, மகாராஷ்டிரா.**

பொது அறிவிப்பு (பிணையப் பற்று (அமலாக்கம்) விதிகள், 2002இன் விதி 3 (1)இன் கீழ்)
நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணையப் பற்று அமலாக்கச் சட்டம், 2002இன் பிரிவு 13 (2)இன் கீழ் அறிவிப்பு வழங்குவதற்கான மாற்று வழி.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் வாங்கியவர்கள், புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட் என்றும், அதற்கு முன்பு குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் என்றும் அறியப்பட்டது) நிறுவனத்திடமிருந்து பெற்ற கடன் வசதியைத் திருப்பிச் செலுத்துவதில் தவறியுள்ளதால், அது தொடர்பான இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின்படி, அவர்களுடைய கடன் வசதியானது வங்கி சாரா நிதி நிறுவனத்தின் (NBFC) கணக்குப் புத்தகங்களில் செயல்படாத சொத்துக்களாக (NonPerforming Assets) வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இதன்மூலம் அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. அதன்பிறகு, NBFC ஆனது, நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணைய வட்டி அமலாக்கச் சட்டம், 2002 (SARFAESI சட்டம்)இன் பிரிவு 13(2)இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் வாங்கியவர்களுக்கு அவர்களின் கடைசியாக அறியப்பட்ட முகவரிகளுக்கு கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பியுள்ளது. அதன்மூலம், அந்தந்த கோரிக்கை அறிவிப்பில்/அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளை, கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, அந்தந்த அறிவிப்பு/அறிவிப்புகளின் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு அவர்களைக் கேட்டு, கோரியுள்ளது. அத்துடன், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு ஒப்பந்த விகிதத்தில் கூடுதல் வட்டியையும், மேலும் அந்த கோரிக்கை அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளபடி இதர செலவுகள், கட்டணங்கள் போன்றவற்றையும் செலுத்துமாறு கோரியுள்ளது. இருப்பினும், பிணைய வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002 (SARFAESI விதிகள்)இன் விதி 3இன் படி, இந்த வெளியீட்டின் மூலமாகவும் இந்தச் சேவை எங்களால் செய்யப்படுகிறது.

| கடன் கணக்கு எண்/கடன் வாங்குபவர் மற்றும் உடன் கடன் வாங்குபவரின் பெயர் மற்றும் முகவரி கடன் வாங்குபவர்/கள் | தேதி NPA | கோரிக்கை அறிவிப்பு தேதி |
|---|---|---|
| | கீழே உள்ள தேதியின்படி மொத்த நிலுவைத் தொகை (இந்திய ரூபாய்) | |
| கடன் A/c எண்: GS086LAP2471524 (கடன் வாங்கியவர்) 1. அதன் உரிமையாளர் அப்துல் மூலம் மஜீத் வர்த்தகர்கள் மஜீத் முகமது அப்துல் காதர் S/o முகமது அப்துல் காதர் (இணை கடன் வாங்கியவர்) 1. காவ்யா பானு W/o அப்துல் மஜீத் முகமது அப்துல் காதர் 2. அப்துல் மஜீத் முகமது அப்துல் காதர் S/o முகமது அப்துல் காதர், முகவரி: 126 முகமைத்யார் தெரு மல்லிப்பட்டினம் தஞ்சாவூர், தமிழ்நாடு 614723 (கடன் வாங்கியவர் 1.) 126 முகமதியர் தெரு சரபேந்திரராஜன்பட்டினம் தபால் நிலையம் மல்லிப்பட்டினம் தஞ்சாவூர், தமிழ்நாடு 614723 (இணை கடன் வாங்கியவர் 1.) 1/126 முகமதியர் தெரு மல்லிப்பட்டினம் சரபேந்திரராஜன்பட்டினம் தஞ்சாவூர், தமிழ்நாடு 614723 (இணை கடன் வாங்குபவர் 2.) | 05.04.2026 | 08.04.2026 |
| | INR 82,96,811.93/- (எண்பத்திரண்டு இலட்சம் தொண்ணூற்று ஆறு ஆயிரம் எட்டு நூற்றுப் பதினொரு ரூபாய் மற்றும் தொண்ணூற்று மூன்று பைசா மட்டும்) 8 ஏப்ரல் 2026 அன்றுள்ள நிலவரப்படி | |

**பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள்/அடமானம் வைக்கப்பட்ட சொத்துக்களின் விவரம்: விவரம் மேற்கூறிய சொத்து:** விடுதலைப் பத்திரம் 20/2020) தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் பட்டுக்கோட்டை பதிவு மாவட்டம் மற்றும் பட்டுக்கோட்டை தாலுகா மற்றும் எரண்டம்புலிக்காடு துணைப் பதிவு மாவட்டம் மற்றும் சேதுபவசமுத்திரம் பஞ்சாயத்து ஒன்றியம் மற்றும் சரபேந்திரராஜன்பட்டினம் பஞ்சாயத்து மற்றும் அமைந்துள்ள இடம் எண்.135 சரபேந்திரராஜன்பட்டினம் கிராமம், கல்லிவயல் தோட்டம் மற்றும் உள்ளடக்கியவை பிரிவு 1: பழைய சர்வே எண்.45/18B, சர்வே எண். 45/18 B1 (புதிய வரிசை எண். 45/18B1A) 0.02.90 ஹெக்டேர் பரப்பளவு கொண்டது 0.07 சென்ட் ஏக்கர் பரப்பளவு, இது 3052 சதுர அடிக்குச் சமம், எல்லைகள்: கிழக்கே: சொத்து முகமது அப்துல் காதர் மற்றும் அஹமது கபீர் வையாரா ஆகியோருக்குச் சொந்தமானது; மேற்கே: சொத்து அமீனா அம்மால் விடுதலைப் பத்திரச் சொத்து; வடக்கே: 2வது இனச் சொத்து; தெற்கே: சொத்து முகமது காசிம் என்பவருக்குச் சொந்தமானது; இதன் மொத்த அளவீடு 3052 சதுர அடி; இனம் 2: பழைய வரிசை எண். 45/18B, வரிசை எண். 45/18B2 (புதிய வரிசை எண். 45/18B2A) 0.00.7 ஹெக்டேர் பரப்பளவு, 0.01 3/4 சென்ட் ஏக்கர் பரப்பளவு கொண்டது, எல்லைகள்: கிழக்கே: பாதை; இதற்கு மேற்கே: அமீனா அம்மாளுக்குச் சொந்தமான விடுதலைப் பத்திரச் சொத்து; இதற்கு வடக்கே: பள்ளிவாசல் சொத்து மற்றும் மக்கன் மரைக்யாருக்குச் சொந்தமான சொத்து; இதற்குத் தெற்கே: முதல் இனச் சொத்து; இதன் உள்ளே மொத்தமாக 0.01 3/4 ஏக்கர் பரப்பளவு; அதனுடன் இணைந்த மற்ற அனைத்து உரிமைகள், கட்டிடங்கள், மேம்பாடுகள் மற்றும் சலுகை உரிமைகளுடன்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள கடனாளி, இந்த அறிவிப்பின் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், வழங்கப்பட்ட அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் மேலும் குறிப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத் தொகையை, அதற்கான கூடுதல் வட்டி மற்றும் அதனுடன் தொடர்புடைய செலவுகள், கட்டணங்கள், இதர செலவுகள் போன்றவற்றுடன் எங்களுக்குச் செலுத்துமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்கிறோம். அவ்வாறு செய்யத் தவறினால், மேற்கூறிய பாதுகாக்கப்பட்ட சொத்து(கள்)/அசையா சொத்து(கள்) மீது, அந்தச் சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ், விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ள எங்களுக்கு உரிமை உண்டு. இதில், பாதுகாக்கப்பட்ட சொத்தை கையகப்படுத்தி விற்பனை செய்வதும் அடங்கும். இந்த நடவடிக்கைகள், அந்த கடனாளி(கள்)/கூட்டுக் கடனாளி(கள்)/சட்டப்பூர்வ வாரிசு(கள்)/சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்) ஆகியோரின் முழுமையான இடர் பொறுப்பில், அவர்களின் சொந்த செலவிலும் விளைவுகளிலும் மேற்கொள்ளப்படும்.

SARAFESI சட்டத்தின் பிரிவு 13(13)ன் படி, வங்கியின் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி, மேற்கூறிய பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை விற்பனை, குத்தகை அல்லது வேறு வழிகளில் மாற்றுவதற்கு நீங்கள் அனைவரும் தடை செய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். கூறப்பட்ட பிரிவை நீங்கள் மீறினால், SARFAESI சட்டத்தின் பிரிவு 29இன் கீழ் வகுக்கப்பட்டுள்ள தண்டனை விதிகள் மற்றும்/அல்லது இது தொடர்பான வேறு ஏதேனும் சட்ட விதி செயல்படுத்தப்படும்.

சட்டத்தின் பிரிவு 13இன் துணைப் பிரிவு (8)இன் படி, Protium Finance Limited (முன்னர் Growth Source Financial Technologies Ltd என அறியப்பட்டது) நிறுவனத்திற்குச் சேர வேண்டிய தொகைகள், அத்துடன் Protium Finance Limited (முன்னர் Growth Source Financial Technologies Ltd என அறியப்பட்டது) நிறுவனத்தால் ஏற்பட்ட அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் இதர செலவினங்கள் ஆகியவை விற்பனை அல்லது பரிமாற்றத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் எந்த நேரத்திலும் Protium Finance Limited (முன்னர் Growth Source Financial Technologies Ltd என அறியப்பட்டது) நிறுவனத்திடம் வழங்கப்பட்டால், அந்தப் பாதுகாக்கப்பட்ட சொத்தானது Protium Finance Limited (முன்னர் Growth Source Financial Technologies Ltd என அறியப்பட்டது) நிறுவனத்தால் விற்கப்படவோ அல்லது பரிமாற்றம் செய்யப்படவோ கூடாது, மேலும் அந்தப் பாதுகாக்கப்பட்ட சொத்தைப் பரிமாற்றம் செய்வதற்கோ அல்லது விற்பதற்கோ Protium Finance Limited (முன்னர் Growth Source Financial Technologies Ltd என அறியப்பட்டது) நிறுவனத்தால் மேற்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படக்கூடாது என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

**தேதி: 23.04.2026,**
**இடம்: தமிழ்நாடு**

**S/d. புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பாக, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**

---

**KBNBFC KrazyBee Services Limited**

**கிரேஸிபீ சர்வீசஸ் லிமிடெட்**
**(முன்னர் கிரேஸிபீ சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் என அறியப்பட்டது)**
**பதிவு அலுவலகம்:** 3வது தளம், எண். 128/9, மாருதி சஃபையர், 35, HAL பழைய விமான நிலைய சாலை, முருகேஷ்பால்யா, பெங்களூரு, கர்நாடகா 560017

**உடைமை அறிவிப்பு**

(நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணைய வட்டி அமலாக்கச் சட்டம், 2002-இன் கீழ் விதி 8(1) - அசையாச் சொத்துக்காக)

ஏனெனில்கீழ்க்கையொப்பமிட்டுள்ள நான், கிரேஸிபீ சர்வீசஸ் லிமிடெட்., (முன்னர் கிரேஸிபீ சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் என அறியப்பட்டது) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக, நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணைய வட்டி அமலாக்கச் சட்டம், 2002 ("சட்டம்")-இன் விதிகளின் கீழ், மற்றும் பிணைய வட்டி அமலாக்கச் சட்டத்தின் விதி 9 உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 13(12)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி... வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002 ("விதிகள்"), சட்டத்தின் பிரிவு 13(2)-இன் கீழ், **03.02.2026** தேதியிட்ட ஒரு **கோரிக்கை அறிவிப்பை** வெளியிட்டது. அந்த அறிவிப்பில், **கடனாளி/கூட்டுக் கடனாளி: 1. ஆனந்தி ஜே (கடனாளி) முகவரி: 35, ரங்கப்பா நாயுடு நகர், மோசூர் சாலை, அரக்கோணம் வேலூர், ராணிப்பேட்டை தமிழ்நாடு 631 001., 2. யு ஜான் மைக்கேல் (கூட்டுக் கடனாளி) முகவரி: 35, ரங்கப்பா நாயுடு நகர், மோசூர் சாலை, அரக்கோணம் வேலூர், ராணிப்பேட்டை தமிழ்நாடு 631 001 (இனிமேல் கூட்டாக "முகவரி எண் 1 மற்றும் 2" எனக் குறிப்பிடப்படுவர்)** ஆகியோர், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையான **ரூ.35,07,300/- (முப்பத்தைந்து இலட்சம் ஏழாயிரத்து முந்நூறு ரூபாய் மட்டும்),** கூடுதல் வட்டி, செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் சேர்த்து, குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பிச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். மேற்கூறிய அறிவிப்பின் தேதியிலிருந்து 60 நாட்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட முகவரி எண் 1 மற்றும் 2 ஆகியோர் குறிப்பிட்ட தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், மேலே குறிப்பிடப்பட்ட கடன் வாங்கியவர்/கூட்டுக் கடன் வாங்கியவர் மற்றும் பொதுமக்களுக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் விதிகளின் விதி 8-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை, கீழ்க்கையொப்பமிட்டவர், **2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ஆம்** தேதியன்று நேரடியாகத் தன்வசப்படுத்தியுள்ளார்.

மேலே குறிப்பிடப்பட்ட முகவரி எண் 1 மற்றும் 2, மற்றும் பொதுமக்கள், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துடன் எந்தவொரு பரிவர்த்தனையும் செய்ய வேண்டாம் என்று இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். சொத்துடனான எந்தவொரு பரிவர்த்தனையும், கிரேஸிபீ சர்வீசஸ் லிமிடெட் (முன்னர் கிரேஸிபீ சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் என அறியப்பட்டது) நிறுவனத்தின் கட்டணத்திற்கு உட்பட்டதாகும். **ரூ.35,07,300/- (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் ஏழாயிரத்து முந்நூறு மட்டும்), 18.12.2025 அன்று** செலுத்த வேண்டிய தொகையாகும், அதனுடன் ஒப்பந்த விகிதத்தில் கூடுதல் வட்டி, செலவுகள், கட்டணங்கள் மற்றும் இதர செலவினங்கள், முழுமையாகச் செலுத்தும் தேதி வரை.

பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்கக் கிடைக்கும் கால அவகாசம் தொடர்பான சட்டத்தின் பிரிவு 13(8)-இன் விதிகளுக்கு முகவரியாளர் எண் 1 மற்றும் 2-இன் கவனம் ஈர்க்கப்படுகிறது.

**அசையாச் சொத்தின் விவரம்:** அரக்கோணம் நகரம், காளிவாரிகண்டிகை, அருந்ததிபாளையம், அரக்கோணம் வட்டம், ராணிப்பேட்டை மாவட்டம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள, 408.77 சதுர மீட்டர் (அல்லது) 4400 சதுர அடி பரப்பளவுள்ள காலி நிலத்தின் ஒரு பகுதி. இது டவுன் வார்டு எண் C, பிளாக் எண் 7, T.S. எண் 97 (பழைய T.S. எண் 12/2 & 3 பகுதி) படி, சர்வே எண் 30/3A, வார்டு எண் C, பிளாக் எண் 3 T.S. எண் 12/4-இல் அடங்கியுள்ளது. இது அரக்கோணம் துணைப் பதிவு மாவட்டம் மற்றும் ராணிப்பேட்டை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. இதன் வடக்கில் பக்தவச்சல நாயுடுவின் சொத்து, தெற்கில் சாலை மற்றும் காலி நிலம், கிழக்கில் சின்ன பிள்ளையின் சொத்து, மேற்கில் கேசவல் நாயுடுவின் சொத்து ஆகியவை எல்லைகளாக உள்ளன.

**தேதி: 22/04/2026, இடம்: சென்னை** **Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கிரேஸிபீ சர்வீசஸ் லிமிடெட்**

---

**உடைமை அறிவிப்பு**

**Godrej | FINANCE — A GODREJ CAPITAL COMPANY**

**கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்**
**பதிவு செய்யப்பட்ட அலுவலகம்:** கோத்ரேஜ் ஒன், பிரோஜ்ஷநகர், ஈஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் ஹைவே, விக்ரோலி (கிழக்கு), மும்பை-400079, மகாராஷ்டிரா
**கிளை அலுவலகம்:** கோத்ரேஜ் கேப்பிட்டல், 208 & 208 A, 2வது தளம், ABW டவர், செக்டர் 25, குருகிராம்-122002

**உடைமை அறிவிப்பு (அசையாச் சொத்துக்காக)**
**(பாதுகாப்பு வட்டி அமலாக்க விதிகள், 2002-இன் விதி 8(1))**
**கடன்/வசதி கணக்கு எண்.- GFL4101LGFL3801LP0016943, GFL3801LT0018721 & GFL3801BL0014520 - சொத்தின் மீதான கடன், இருப்புப் பரிமாற்ற டாப் அப் & வணிகக் கடன் வசதிகள்- (1) திருமதி. சங்கீதா, (2) திரு. கார்த்திக் ஆர், (3) M/s. ஸ்ரீ சாய் ஃபுட்ஸ் ஆகியோருக்குக் கடன் வழங்கப்பட்டது.**

ஏனெனில்,கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், நிறுவனங்கள் சட்டம், 2013-இன் கீழ் இணைக்கப்பட்ட ஒரு நிறுவனம், இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து ஒரு வீட்டுவசதி நிறுவனமாகப் பதிவு பெற்றது மற்றும் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கோத்ரேஜ் ஒன், பிரோஜ்ஷநகர், ஈஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் ஹைவே, விக்ரோல் (கிழக்கு) மும்பல்-400079 மகாராஷ்டிரா மற்றும் மற்றொரு அலுவலகம் கோத்ரேஜ் கேப்பிட்டல், 208 & 208 ஏ, 2வது தளம், ஏபிடபிள்யூ டவர், செக்டர் 25, குருகிராம்- 122002 ஆகிய முகவரிகளில் உள்ளது, அதன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணையப் பற்றுரிமை அமலாக்கச் சட்டம், 2002-இன் கீழ் மற்றும் பிணையப் பற்றுரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 3 உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 13(12)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, **09.02.2026** தேதியிட்ட ஒரு கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டார். விண்ணப்பதாரர்/கடன் வாங்குபவர்/இணை விண்ணப்பதாரர்/இணை கடன் வாங்குபவர்/உத்தரவாதம் அளிப்பவர்கள்/அடமானதாரர்கள் (1) திருமதி. சங்கீதா, (2) திரு. கார்த்திக் ஆர், (3) மெஸ்ஸர்ஸ் ஸ்ரீ சாய் ஃபுட்ஸ் ஆகியோர், அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள **ரூ.1,26,76,894/- ( ரூபாய் ஒரு கோடி இருபத்தாறு இலட்சம் எழுபத்தாறாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று நான்கு மட்டும்) தொகையை, 09.02.2026 அன்று** செலுத்த வேண்டிய தொகையுடன், ஒப்பந்த(ங்க)ளின்படியான அடுத்தடுத்த வட்டி, அபராத வட்டி, கட்டணங்கள், செலவுகள் முதலியவற்றுடன், அந்த அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும்.

விண்ணப்பதாரர்/கடன் வாங்குபவர்/இணை-விண்ணப்பதாரர்/இணை-கடன் வாங்குபவர்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்கள், தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், குறிப்பாக விண்ணப்பதாரர்/கடன் வாங்குபவர்/இணை-விண்ணப்பதாரர்/இணை-கடன் வாங்குபவர்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்களுக்கும், பொதுவாக பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், நிறுவனத்தின் கீழ்க்கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4)-உடன் சேர்த்துப் படிக்கப்படும் விதி 8-இன் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2026-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ஆம் தேதியன்று தன்வசப்படுத்தியுள்ளார்.

பாதுகாக்கப்பட்ட சொத்து/சொத்துக்களை மீட்கக் கிடைக்கும் கால அவகாசம் தொடர்பாக, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13-இன் துணைப் பிரிவு (8)-இல் உள்ள விதிகளுக்கு விண்ணப்பதாரர்/கடன் வாங்குபவர்/இணை-விண்ணப்பதாரர்/இணை-கடன் வாங்குபவர்/உத்தரவாததாரர்கள்/இணை-கடன் வாங்குபவர்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.குறிப்பாக விண்ணப்பதாரர்/ கடன் வாங்குபவர்/ இணை-விண்ணப்பதாரர்/ இணை-கடன் வாங்குபவர்/ உத்தரவாதிகள்/ அடமானதாரர்கள் மற்றும் பொதுவாக பொதுமக்கள், இந்தச் சொத்துடன் எந்தவொரு பரிவர்த்தனையும் செய்ய வேண்டாம் என இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும், இந்தச் சொத்துடன் செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனையும், 09.02.2026 அன்று செலுத்த வேண்டிய **ரூ.1,26,76,894/- (ஒரு கோடி இருபத்தாறு இலட்சம் எழுபத்தாறு ஆயிரம் எண்ணூற்று தொண்ணூற்று நான்கு ரூபாய் மட்டும்)** தொகை மற்றும் 10.02.2026 முதல் அதற்கான வட்டி ஆகியவற்றை கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனம் கட்டணமாக விதித்துக்கொள்ளும்.

**அட்டவணை-1**
**பாதுகாக்கப்பட்ட சொத்து/சொத்துக்களின் விவரம்**

**சொத்து 1:** திருவள்ளூர் மாவட்டம், ஆவடி தாலுகா, அயப்பாக்கம் கிராமம், அம்பத்தூர் நகர்ப்புற அபிவிருத்தித் திட்டம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் (TNHB) அமைந்துள்ள, ப்ளாட் எண் 4377, LIG-II வகை, சர்வே எண் 49 பகுதியை உள்ளடக்கிய, 90 சதுர மீட்டர் அல்லது 968.4 சதுர அடி பரப்பளவுள்ள நிலம் மற்றும் கட்டிடம் முழுவதுமாகும். இதன் **எல்லைகள்: வடகிழக்கு:** ப்ளாட் எண்கள் 4360 மற்றும் 4361, **தென்கிழக்கு:** ப்ளாட் எண் 4376, **தென்மேற்கு:** 5 மீட்டர் சாலை, **வடமேற்கு:** ப்ளாட் எண் 4378. அளவுகள்: **வடகிழக்கு:** 6.00 மீட்டர், **தென்கிழக்கு:** 15.00 மீட்டர், **தென்மேற்கு:** 6.00 மீட்டர், **வடமேற்கு:** 15.00 மீட்டர். மேலும், சென்னை வடக்கு பதிவு மாவட்டம் மற்றும் அம்பத்தூர் துணைப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது.

**சொத்து 2:** தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், அம்பத்தூர் முதல் மற்றும் இரண்டாம் கட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தில், மனை எண் 1397, EWSA வகையைச் சேர்ந்த, 44 சதுர மீட்டர் அல்லது 473.44 சதுர அடி பரப்பளவுள்ள நிலம் மற்றும் கட்டிடம் அடங்கிய முழு நிலப்பகுதி. இது சர்வே எண் 49-பகுதி, அயப்பாக்கம் கிராமம், அம்பத்தூர் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம், வட சென்னை பதிவு மாவட்டம், அம்பத்தூர் துணைப் பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. இதன் **எல்லைகள் பின்வருமாறு: வடக்கே:** மனை எண் 1385. **தெற்கில்:** மனை எண் 1398, **கிழக்கில்:** மனை எண் 1386 மற்றும் 3 மீட்டர் சாலை, **மேற்கில்:** மனை எண்கள் 1697, 1698 மற்றும் 1699. **வடக்கில்:** 4.0 மீட்டர், **தெற்கில்:** 4.0 மீட்டர், **கிழக்கில்:** 11.0 மீட்டர், **மேற்கில்:** 11.0 மீட்டர். கட்டிடம், மின்சார இணைப்பு முதலியவற்றுடன் சேர்த்து மொத்தம் 44 சதுர மீட்டர் அல்லது 473.44 சதுர அடி பரப்பளவு கொண்டது. மேலும், சென்னல் வடக்கு பதிவு மாவட்டத்திலும், அம்பட்டு மாவட்டத்தின் துணைப் பதிவிலும் அமைந்துள்ளது.

**தேதி: 23.04.2026**
**இடம்: திருவள்ளூர்**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்**

---

**ICICI Home Finance**

**பெருநிறுவன அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட், ஐசிஐசிஐ ஹெச்எஃப்சி டவர், அந்தேரி குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை 400059, இந்தியா**
**கிளை அலுவலகம்: லயன் ஆர்கேட், 1A, முதல் தளம், மதுரை சாலை, மேற்கு வீதி, சிந்துபூண்டரை, திருநெல்வேலி 627001**
**கிளை அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட், அபெக்ஸ் சேம்பர், அலுவலகப் பகுதி எண்.3, 3வது தளம், எண்.20, தியாகராய சாலை, டி நகர், சென்னை 600017**
**கிளை அலுவலகம்: 2வது தளம், எண்: 75 D, லக்ஷ்மி வால்ட்ஸ், ப்ளாட் A8, சாலை சாலை, தில்லை நகர், திருச்சிராப்பள்ளி 620018**

**[விதி 8(6)இன் நிபந்தனையைப் பார்க்கவும்] அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான அறிவிப்பு**

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணையப் பற்று அமலாக்கச் சட்டம், 2002இன் கீழ், பிணையப் பற்று (அமலாக்கம்) விதிகள், 2002இன் விதி 8(6)இன் நிபந்தனையுடன் சேர்த்துப் படிக்கையில், அசையாச் சொத்துக்கள் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுவான பொதுமக்களுக்கும், குறிப்பாகக் கடன் வாங்கியவர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் உடைமை எடுக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவருக்கு அடமானம்/பொறுப்பு வைக்கப்பட்டுள்ள, கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, கீழே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கமான விவரங்களின்படி, "உள்ளபடியே, இருக்கும் இடத்தில்", "உள்ளபடியே, என்ன உள்ளதோ அப்படியே", மற்றும் "என்ன உள்ளதோ அதுவரை" என்ற அடிப்படையில் விற்கப்படும்;

| | கடன் வாங்குபவர்(கள்)/கூட்டுக் கடன் வாங்குபவர்கள்/ உத்தரவாதம் அளிப்பவர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகளின் பெயர். கடன் கணக்கு எண். | அறியப்பட்ட பளுக்கள் உள்ள பிணையச் சொத்து(கள்) குறித்த விவரங்கள், ஏதேனும் இருப்பின். | நிலுவைத் தொகை | முன்பதிவு விலை / முன் பண வைப்பு | சொத்து ஆய்வு தேதி மற்றும் நேரம் | ஏலத்தின் தேதி மற்றும் நேரம் | ஏலத் தேதிக்கு ஒரு நாள் முன்பு | சர்ஃபேசி நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|
| (A) | (B) | (C) | (D) | (E) | (F) | (G) | (H) | (I) |
| 1. | செல்வராஜ் நவமணி நாடார் (கடன் வாங்கியவர்) அமுதா எஸ் நாடார் (இணை கடன் வாங்கியவர்) ராஜ்குமார் எம் (உத்தரவாததாரர்) கடன் எண். LHTV100001323539 | அமுதா இல்லம் 5வது தெரு, கதவு எண்65D, காமராஜர் நகர் ஆலங்குளம் கிராமம், ஆலங்குளம் SRO தென்காசி திருநெல்வேலி627851 | ரூ. 15,25,831/ ஏப்ரல் 17, 2026 | ரூ. 43,33,950/ / ரூ. 4,33,395/ | மே 18, 2026 காலை 11:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி வரை | மே 25, 2026 பிற்பகல் 02:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி வரை | மே 22, 2026 மாலை 05:00 மணிக்கு முன் | குறியீட்டு உடைமை |
| 2. | சுரேஷ் (கடன் வாங்குபவர்) ஸ்ரீ கலா (கூட்டுக் கடன் வாங்குபவர்) கடன் எண். LHTBM00001324300 | எஸ் எண் 288 மாடி எண் 02 பிள்ளையார் கோயில் தெரு, கிராமநத்தம் எஸ். எண்.158/99 (பகுதி) பட்டா எஸ். எண்.268/5, பஞ்சாபி எஸ். எண். 158/44பி (பகுதி), பட்டா புதிய எஸ். எண்.268/6(புதிய எண்.268/6(புதிய எண்.268/601ல்), நான் சதுரங்கப்பட்டினம், திருக்கழுக்குன்றம் செங்கல்பட்டு தமிழ்நாடு603104 | ரூ. 25,78,485/ ஏப்ரல் 17, 2026 | ரூ. 39,93,840/ / ரூ. 3,99,384/ | மே 18, 2026 காலை 11:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி வரை | மே 25, 2026 பிற்பகல் 02:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி வரை | மே 22, 2026 மாலை 05:00 மணிக்கு முன் | குறியீட்டு உடைமை |
| 3. | சி வேலாயுதம் (கடன் வாங்குபவர்) ரேவதி (கூட்டுக் கடன் வாங்குபவர்) கடன் எண். LHTRI00001326094 | பிளாட் 67 சாரநாத் நகர், தளவப்பாளையம் கிராமம், கதிரிநத்தம் பஞ்சாயத்து, பாபநாசம் தாலுகா ஆர்.எஸ். எண் 422/1A1A1 தஞ்சாவூர்613001 | ரூ. 45,26,861/ ஏப்ரல் 17, 2026 | ரூ. 53,10,360/ / ரூ. 5,31,036/ | மே 04, 2026 காலை 11:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி வரை | மே 11, 2026 பிற்பகல் 02:00 மணி முதல் பிற்பகல் 03:00 மணி வரை | மே 08, 2026 மாலை 05:00 மணிக்கு முன் | குறியீட்டு உடைமை |

எங்கள் ஏல நிறுவனமான வேல்யூட்ரஸ்ட் கேப்பிட்டல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளத்தில் (URL இணைப்புhttps://BidDeal.in) ஆன்லைன் ஏலம் நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிப்புதாரர்கள், மே 22, 2026, மே 08, 2026 ஆகிய தேதிகளில் மாலை 05:00 மணிக்கு முன், கூடுதல் வட்டியுடன் மொத்த நிலுவைத் தொகையைச் செலுத்த கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது. இல்லையெனில், இந்தப் பிணையச் சொத்துக்கள் மேலே உள்ள அட்டவணைப்படி விற்கப்படும்.

ஏலம் கோரவிருப்பவர்(கள்), முன்பண வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (பத்தி Eஐப் பார்க்கவும்) ஆகியவற்றை, இந்தக் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ICICI ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கிளை அலுவலக முகவரியில், மே 22, 2026, மே 08, 2026 ஆகிய தேதிகளில் மாலை 04:00 மணிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும். வருங்கால ஏலதாரர்(கள்) பதிவுப் படிவம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் படிவத்தின் கையொப்பமிடப்பட்ட நகலை, இக்கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கிளை அலுவலக முகவரியில், மே 22, 2026 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ அல்லது மே 08, 2026 அன்று மாலை 05:00 மணிக்கு முன்னரோ சமர்ப்பிக்க வேண்டும். முன்பண வைப்புத்தொகைக்கான கேட்பு வரைவோலை (DD), இக்கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிளை அலுவலக முகவரியில் செலுத்தத்தக்க வகையில், "ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் ஏலம்" என்ற பெயரில் ஒரு தேசியமயமாக்கப்பட்ட/பட்டியலிடப்பட்ட வங்கியிலிருந்து எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆய்வு, ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஒப்பந்தப்புள்ளிகளைச் சமர்ப்பிப்பது தொடர்பான மேலதிக விளக்கங்களுக்கு, தயவுசெய்து ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டை 9920807300 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, எந்தவொரு மேலதிக காரணங்களையும் தெரிவிக்காமல், எந்தவொரு ஏலத்தையும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்கும் உரிமையைக் கொண்டுள்ளார்.

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவுசெய்து https://www.icicihfc.com/ என்ற இணையதளத்தைப் பார்வையிடவும்.

**தேதி: ஏப்ரல் 23, 2026**
**இடம்: திருநெல்வேலி, செங்கல்பட்டு, தஞ்சாவூர்**

**அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, "ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்", CIN எண்: U65922MH1999PLC120106**

மழை பெய்தால் வெள்ள அபாயம்:

# தமிழ்நாட்டில் எதிர்பார்த்த அளவில் எந்த முன்னேற்றமும் இல்லை

## சென்னையில் சந்திரபாபு நாயுடு பேட்டி

சென்னை,ஏப்.23–
தமிழ்நாட்டில் எதிர்பார்த்த அளவில் எந்த முன்னேற்றமும இல்லை என்று சென்னையில் சந்திரபாபு நாயுடு கூறினார்.



இது தொடர்பாக சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது: தமிழகத்தில் உள்ள நகரங்களின் உட்கட்டமைப்புகள் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. அதே பழைய சாலைகள். பலத்த மழை பெய்தால் வெள்ள அபாயம். சட்டம் ஒழுங்கு சீர் கெட்டுள்ளது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 59 சதவீதம் அதிகரித்துள்ளது. பட்டியலின மக்களுக்கு எதிரான குற்றங்கள் 39 சதவீதமாக உயர்ந்துள்ளது.எதிர்பார்த்த எந்த முன்னேற்றமும் தமிழகத்தில் காணப்படவில்லை. ஐடி துறையில் ஐதராபாத், பெங்களூரு போன்றவை எல்லைகளை தாண்டி சென்றுவிட்டன. சென்னையைப் பற்றி யாரும் பேசுவதில்லை. உலகளாவிய நிறுவனங்களில் தலைமை செயல் அதிகாரிகளாக இருப்பவர்கள் தமிழர்கள். ஆனால், அவர்களின் திறமைகள் தமிழகத்துக்கு பயன்படுவதில்லை.எனவே, உங்களுக்கான அதிகாரமளித்தல், வேலைவாய்ப்பு, பிரகாசமான எதிர்காலத்தை தேசிய ஜனநாயக கூட்டணி நிச்சயம் வழங்கும். இரட்டை என்ஜின் அரசு எப்படி செயல்படும் என்பதை நான் பார்த்திருக்கிறேன். இப்போது கூகுள் நிறுவனத்தின் 15 பில்லியன் அமெரிக்க டாலர்கள் முதலீட்டை நாங்கள் பெற்றிருக்கிறோம்.ஒரே ஆண்டில் 25.3 சதவீத முதலீடு ஆந்திர பிரதேசத்துக்கு வந்துள்ளது. இதை தனி மாநிலமாக எங்களால் ஈர்க்க முடியாது. இரட்டை என்ஜின் அரசு என்பது புல்லட் வேக வளர்ச்சியாகும். இது காலத்தின் தேவை. அதேசமயம் ஒற்றை என்ஜின் அரசு,அரசியல் லாபம் நோக்கம் கொண்டது. மாநிலங்கள் மற்ற மாநிலங்களுடன் போட்டியிட வேண்டும். அதேசமயம் மத்திய அரசுடன் ஒத்துழைக்க வேண்டும். நமக்கு தாய்மொழிகள் வெவ்வேறாக இருக்கலாம். ஆனால், நம் நாடு ஒன்றுதான்.அனைவரும் பாரத மாதாவின் பிள்ளைகள். அதைவிடுத்து தெற்கு, வடக்கு என்று பேசி கொண்டிருக்கக் கூடாது. எனவே, தமிழக மக்களே சிந்தியுங்கள். தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு வாக்களியுங்கள். இந்த வாய்ப்பை தவறவிடக்கூடாது. தவறவிட்டால் அடுத்த 5 ஆண்டுகளை நீங்கள் இழக்க நேரிடும்.தொகுதி மறுவரையறையில் பிரதமர் மோடியைதமிழகம்தோற்கடித்து விட்டதாக ஸ்டாலின்கூறுவது ஆச்சரியமாக உள்ளது.

நானும் திராவிடன் தான். அதை மறக்காதீர்கள். இந்த மசோதாவால் எந்த மாநிலமும் இடங்களை இழக்காது, 50 சதவீத இடங்கள் கூடத்தான் செய்யும்.

அதில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு. இதில் தென்னிந்தியா எப்படி இடங்களை இழக்கிறது? திமுகவும், காங்கிரஸும் பெண்களுக்கு எதிராக துரோகம் இழைத்து விட்டனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

விபத்துகளை தவிர்க்க

# கோடை காலத்தில் பட்டாசு உற்பத்தியை நிறுத்தி வைக்கலாம்

## உயர்நீதிமன்ற நீதிபதிகள் யோசனை

மதுரை, ஏப். 23
கோடை காலத்தில் ஏற்படும் பட்டாசு ஆலை விபத்துகளைதவிர்க்க பட்டாசு உற்பத்தியை தவிர்க்கலாம் என்று உயர்நீதிமன்ற நீதிபதிகள் யோசனை தெரிவித்துள்ளனர்.

சிவகாசியில் 2014–ல் பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்துக்கு இழப்பீடு கோரி சமுத்திரவள்ளி உள்ளிட்டோர் உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனுக்களை விசாரித்த தனி நீதிபதி, பட்டாசு ஆலை விபத்தில் பாதிக்கப்பட்டகுடும்பங்களுக்கு அரசுப் பணி, கணவர்களை இழந்த பெண்களுக்கு ஓய்வூதியம், வீடு உள்ளிட்ட மறுவாழ்வுப் பணிகளை அமல்படுத்த வேண்டும் உள்ளிட்ட உத்தரவுகளை பிறப்பித்தார்.

இந்த உத்தரவுக்கு எதிராக உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் அரசு தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த மனு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் விசாரணைக்கு வந்தது.

மனுதாரர்கள் சார்பில் வழக்கறிஞர் ஆர்.கருணாநிதி வாதிட்டார். பின்னர் நீதிபதிகள், பட்டாசு ஆலைகளில் விபத்துகள் தொடர்ந்து நடக்கின்றன.

இதைத் தடுக்க அரசு என்ன செய்கிறது, பட்டாசு ஆலை விபத்துகள் தொடர்வது வருத்தம் அளிக்கிறது. இதற்கு உரிய தீர்வு காணப்படும் என்றனர். கூடுதல் அட்வகேட் ஜெனரல் அஜ்மல்கான் வாதிடுகையில், பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு ரூ.5 லட்சம் இழப்பீடும், உடல்களை அடக்கம் செய்ய ரூ.50 ஆயிரமும் வழங்கப்படுகிறது என்றார்.

அதற்கு நீதிபதிகள், பட்டாசு ஆலை தொழிலாளர்களுக்கு ரூ.25 முதல் ரூ.30 லட்சத்துக்கான காப்பீடு செய்த பின்னரே அவர்களை பணியில் ஈடுபடுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். பட்டாசு ஆலை விபத்துகளில் அதிகளவில் பெண்களே பாதிக்கப்படுகின்றனர்.

கோடை காலங்களில் பட்டாசு உற்பத்தியை நிறுத்தி வைப்பது தொடர்பாக அரசு முடிவெடுக்க வேண்டும். விபத்துகளை தடுப்பது தொடர்பாக வழக்கறிஞர்கள் பரிந்துரைகளை வழங்கலாம். விசாரணை ஜூன் 8–க்கு தள்ளி வைக்கப்படுகிறது என உத்தரவிட்டனர்.

பணிக்கு செல்லும் இளைஞர்களுக்கும்

# இருசக்கர வாகன திட்டத்தில் ரூ.10 ஆயிரம் மானியம்

## எடப்பாடி பழனிசாமி வாக்குறுதி

சென்னை, ஏப். 23
பணிக்கு செல்லும் இளைஞர்களுக்கும் இருசக்கர வாகன திட்டத்தில் ரூ.10 ஆயிரம் மானியம் வழங்கப்படும் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



அ.தி.மு.க. சார்பில் ஏற்கனவே மகளிர் தொழில் தொடங்க ரூ.10 ஆயிரம், மகளிருக்கு மாதந்தோறும் ரூ.2 ஆயிரம், பிரிட்ஜ் என 297 வாக்குறுதிகள் அடங்கிய தேர்தல் அறிக்கையை பொதுச்செயலாளர்பழனிசாமி வெளியிட்டிருந்தார். நேற்று மாலையுடன்பிரசாரம் நிறைவடையும் நிலையில், நேற்று கூடுதலாக 10 வாக்குறுதிகளை அவர் வெளியிட்டார்.

அதன் விவரம் வருமாறு:–

அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன், மா விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு, மாம்பழத்துக்கு ஆதார விலை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படும். பணிக்குச் செல்லும் 10 லட்சம் இளைஞர்களுக்கு,அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் இருக்கர வாகனம் வாங்க ரூ.10 ஆயிரம் மானியம் வழங்கப்படும். கிருஷ்ணகிரி மாவட்டம்சூளகிரி, ஓசூர், தேன்கனிக்கோட்டை, தளி ஆகிய பகுதிகளில் பாரம்பரிய முறைப்படி நடந்து வரும் ‘அத்துக் கட்டு’ பண்டிகையை, பாரம்பரிய முறையில் தொடர்ந்து நடத்துவதற்கு அரசாணை பிறப்பிக்கப்படும்.

கட்டிடத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள கட்டிடத் தொழிலாளர்கள், பணி செய்யும்போது தவறி விழுந்துஉயிரிழக்கநேரிட்டால், அவர்களது குடும்பத்துக்கு ரூ.25 லட்சம் இழப்பீடு வழங்கப்படும்.பனை தொழிலாளர்கள், பனைமரம் ஏறி தவறி விழுந்துஉயிரிழக்கநேரிட்டால், அவர்களது குடும்பத்துக்கு ரூ.20 லட்சம் இழப்பீடு வழங்கப்படும். அரசு கேபிள் டி.வி. கட்டணம் 50 சதவீதமாகக் குறைக்கப்படும்.

கடலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் முந்திரிஉடைக்கும்தொழிலில் அதிக அளவிலான பெண்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களது வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, சிறிய அளவிலான முந்திரி உடைக்கும் கை கருவி இலவசமாக வழங்கப்படும். பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க, கண்காணிக்க24மணிநேரமும் இயங்கும் வார் ரூம் மாவட்டத் தலைநகரங்களில் அமைக்கப்படும்.

மாணவர்கள் கல்லூரி படிப்பை முடித்தவுடன், வேலைவாய்ப்பு மற்றும்போட்டித் தேர்வுகளுக்கு தயாராக, தாலுகா அளவில் சிறப்பு கவுன்சிலிங் அமைப்பு ஏற்படுத்தப்படும். இளைஞர்கள், இளம்பெண்கள், சிறு, குறு தொழில்கள் தொடங்குவதற்கு விணப்பித்தால், ஒற்றைச்சாளர முறையில் 30 நாட்களில் உரிமம் வழங்கப்படுவதுடன், அதற்காக வழங்கப்படும் மானியம் 25 சதவீதத்தில் இருந்து 35 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும்.


இவ்வாறு அவர் அறிவித்துள்ளார்.

வாரிசு அரசியலை மக்கள் மன்னிக்க மாட்டார்கள்:

# தமிழ்நாட்டின் பின்னடைவுக்கு இரண்டு குடும்பங்கள் காரணம்

## மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் விமர்சனம்

சென்னை,ஏப்.23–
தமிழ்நாட்டின் பின்னடைவுக்கு 2 குடும்பங்கள் காரணம் என்று மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் கூறினார்.



தமிழகத்தின் ஆன்மாவை ஸ்டாலின் குடும்பம் சிதைத்து விட்டது என்று மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் கூறியதாவது: தமிழக மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள் என்பது இந்தத் தேர்தல் களத்தில் ஆணித்தரமாக உறுதியாகிவிட்டது. திமுக மற்றும் காங்கிரஸ் கட்சிகள், மக்கள் நலனுக்காகப் பாடுபடும் கட்சிகள் அல்ல.

அவை ஸ்டாலின் குடும்பத்தாலும், காந்தி குடும்பத்தாலும் நடத்தப்படும் ‘பிரைவேட் லிமிடெட்’ நிறுவனங்கள். இத்தகைய வாரிசு அரசியல் கலாச்சாரத்தை தமிழக மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். தமிழகத்தின் இன்றைய பின்னடைவுக்கு இந்த இரண்டு குடும்பங்களே முழு முதற்காரணம்.

திமுக அரசு ஊழலில் திளைக்கிறது. வளர்ச்சிப் பணிகளுக்காகக் கருவூலத்தில் ஒரு பைசாவைக் கூட இவர்கள் மிச்சம் வைக்கவில்லை. ஸ்டாலின், உதயநிதி, சபரீசன் மற்றும் கனிமொழி என இந்தக் குடும்பத்தினர் தமிழகத்தின் ஆன்மாவையே சிதைத்து விட்டனர்.

சனாதன தர்மத்தை டெங்கு போன்றது என விமர்சிப்பதன் மூலம், உதயநிதி ஸ்டாலின் தமிழகத்தின் தொன்மையான பண்பாட்டையும் ஆன்மீகச் சிந்தனையையும் நேரடியாகத் தாக்குகிறார். தேர்தலுக்காகக் கோயில்களுக்குச் செல்வதால் மட்டும் உங்கள்பாவங்களைக்கழுவிவிட முடியாது.

மக்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதமரை, ‘பயங்கரவாதி’ என்று அழைக்கும் அளவுக்கு திமுகவும்–காங்கிரஸும் தரம் தாழ்ந்துவிட்டன. மல்லிகார்ஜுன கார்கேயின் இந்த வன்மமான பேச்சை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

உதயநிதி ஸ்டாலினை அடுத்த முதல்வராக்க ஸ்டாலின் துடிக்கிறார். தமிழ் கலாச்சாரத்துக்கு எதிராகப் பேசுபவரைத் துணை முதல்வராக்கியு ள்ளனர்.

தமிழக மக்களே, உங்கள் எதிர்காலத்தையும் உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தையும் பாதுகாக்க வேண்டிய நேரம் இது. வாரிசு அரசியலை வீழ்த்து வோம், வளர்ச்சியைத் தேர்ந்தெடுப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

நாளை வாக்குப்பதிவு நாளில்

# அவசர கால மருத்துவர்கள் விடுப்பு எடுக்காமல் பணிக்கு வரவேண்டும்

## மாநில சுகாதாரத்துறை அறிவிப்பு

சென்னை, ஏப். 23
வாக்குப்பதிவு நாளில் அவசர கால மருத்துவ சேவைகளில் இருப்பவர்கள் விடுப்பு எடுக்காமல் பணிக்கு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். தமிழகம் முழுவதும் 75,000க்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகள்அமைக்கப்பட்டுள்ளன. ஒரு புறம் வாக்குப்பதிவுக்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. மற்றொரு புறம் வாக்காளர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளுக்கு சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை சுகாதாரத்துறை மேற்கொண்டு வருகிறது.மருத்துவ சேவைகள் தடையின்றி கிடைக்கும் வகையில், வாக்குப்பதிவு நாளில் அவசர சிகிச்சைகளில் பணியாற்றுவோர் ஜனநாயகக் கடமையாற்றிவிட்டு விடுப்பு எடுக்காமல் பணிக்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



இது தொடர்பாக சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

வெயில் பாதிப்பு தீவிரமாக இருப்பதால் முதியவர்கள், இணை நோயாளிகள் போன்றவர்களுக்கு வாக்குப்பதிவின் போது சில அசௌகரியங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு மக்கள் நல்வாழ்வுத்துறை அறிவுறுத்தலின் படி, வாக்குச்சாவடிகளுக்குஅருகேஆங்காங்கே ஆம்புலன்ஸ் வாகனங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு மொத்தம் 1,350க்கும் அதிகமான வாகனங்கள் தமிழகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அதில், குளுக்கோஸ் பாட்டில்கள், உப்புசர்க்கரை கரைசல், ஆக்சிஜன் சிலிண்டர்கள் ஆகியவை வழக்கத்தைக் காட்டிலும் அதிகமாக இருப்பு வைக்கப்பட்டு தேவையான எண்ணிக்கையில் மருத்துவ உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். தேர்தல் நாளில் விடுப்பு எடுக்காமல் வருமாறும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று 108 சேவைக்கான கட்டுப்பாட்டு மையத்திலும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வெயிலின் தாக்கத்துக்கு இடையே பொதுமக்கள் பாதுகாப்புடன் தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவசர உதவிகளுக்கு 104 அல்லது 108 எண்களை அழைக்கலாம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

வேடசந்தூர் அருகே துணிகரம்:

# மளிகை கடை பூட்டை உடைத்து ரூ.1 லட்சம் திருட்டு

## ஆதார் அட்டைகளை மர்ம ஆசாமிகள் தீவைத்து கொளுத்தினர்

வேடசந்தூர், ஏப்.23–
திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர்அருகே உள்ள குட்டம் கிராமம் சுக்காம்பட்டியில் குமரவேல் என்பவர் சித்தமரம் நால்ரோடு கோட்டூர் செல்லும் சாலையோரம் மளிகை கடை வைத்துள்ளார்.

நேற்றுஇரவு10மணிக்கு வியாபாரம் முடிந்ததும் மளிகை கடையை பூட்டி விட்டு தனது வீடு உள்ள சுக்காம்பட்டிக்கு சென்று தூங்கிவிட்டு இன்று காலை கடையை திறக்க வந்த போது கடையின் இரண்டு பூட்டு உடைக்கப்பட்டு இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

உள்ளே சென்று பார்த்த போது சில நாட்களாக வியாபாரம் ஆன கல்லாப் பெட்டியில் இருந்த ரூ 1 லட்சம் பணம் திருடப்பட்டும், மேலும் அங்கிருந்த வியாபாரி குமரவேலின் குடும்பத்தினர் ஆதார் அட்டைகளில் தீ வைத்து எரிக்கப்பட்டு இருந்தது.

இதுகுறித்து குமரவேல் வேடசந்தூர் போலீசில் புகார் செய்தார். இன்ஸ்பெக்டர் கணேசமூர்த்தி வழக்குப்பதிவு செய்து போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று அந்தப் பகுதியில் பதிவான சிசிடிவி கண்காணிப்பு கேமராபதிவுகளை ஆய்வு நடத்தி வருகின்றனர்.

வியாபாரி குமரவேல் மளிகை கடையை பூட்டி விட்டு சென்றதை நோட்டமிட்ட மர்ம ஆசாமிகள் நள்ளிரவு நேரத்தில் கடையின் பூட்டை உடைத்து பணத்தை திருடிக்கொண்டும், அங்கிருந்த ஆதார் அட்டைகளைதீவைத்துகொளுத்திவிட்டு சென்றனர்.

மளிகை கடையில் பூட்டைஉடைத்துதிருடிய சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சாயல்குடி அருகே

# மது பாட்டில்கள் விற்ற ஒருவர் கைது

## 320 மது பாட்டில்கள் பறிமுதல்

சாயல்குடி, ஏப். 23–
சாயல்குடி அருகே சட்டவிரோதமாக மது விற்பனையில் ஈடுபட்டவரை போலீசார் கைது செய்து, அவரிடமிருந்து 320 மது பாட்டில்களை பறிமுதல் செய்தனர்.

தமிழகத்தில் வருகின்ற 23–ம் தேதி சட்டமன்றத் தேர்தல் நடைபெறுவதையொட்டி அசம்பாவிதங்களை தடுக்கும் வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தேர்தல் ஆணையம் நேற்று ஏப்ரல் 21 முதல் 23 தேதி வரை தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மதுபான கடைகள் மற்றும் மனமகிழ் மன்றங்கள்உள்ளிட்ட அனைத்து மதுபான கடைகளை மூட உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் ராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியை அடுத்த நரிப்பையூர் அரசு மதுபான கடையின் பின்புறம் சட்டவிரோதமாக மது விற்பனை நடைபெறுவதாக சாயல்குடி காவல் துறையினருக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்துஅப்பகுதியில் சாயல்குடி காவல் ஆய்வாளர்அன்னராஜ்உத்தரவின் பேரில்

காவல் உதவி ஆய்வாளர் மணிகண்டன் தலைமையிலான போலீசார் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது நரிப்பையூர் அரசு டாஸ்மாக் கடையில் பணிபுரியும் மேற்பார்வையாளர் மற்றும் விற்பனையாளர்கள் உதவியுடன் சமூக விரோதிகளால் சட்டவிரோதமாக கொள்முதல் செய்யப்பட்ட பீர் மற்றும் பிராந்தி வகையிலான மதுப்பாட்டில்களை அரசு மதுபான கடைக்குப் பின்புறம் மறைவான இடத்தில் வைத்து சட்டவிரோதமாக மது பாட்டில்கள் விற்பனை செய்யப்பட்டது தெரியவந்தது.

இதனைதொடர்ந்து மது விற்பனையில் ஈடுபட்ட நரிப்பையூர் கிராமத்தைச் சேர்ந்த முருகேசன் மகன் சத்தியநாதனை (48) கைது செய்து,

அவரிடமிருந்து 320 மதுப் பாட்டில்களை போலீசார் பறிமுதல் செய்ததுடன் வழக்குப்பதிந்து விசாரணை செய்து வருகின்றனர்.

### ஹோர்முஸ் நீரிணை முற்றுகை தொடரும்:

# அமெரிக்கா – ஈரான் போர் நிறுத்தம் நீட்டிப்பு

## அதிபர் டிரம்ப் அறிவிப்புக்கு மறுப்பு தெரிவித்து தாக்குதலுக்கு தயார் என ஈரான் அறிவிப்பு

**புது டெல்லி, ஏப் 23**
அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையிலான போர் நிறுத்தம் நேற்றுடன் முடிவடைந்த நிலையில் போர் நிறுத்தத்தை நீட்டிப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவிப்பு வெளியிட்டுள்ளார். ஈரான் பேச்சுவார்த்தைக்கு தயாராக இந்த கால அவகாசம் உதவும், அதே நேரத்தில் ஹோர்முஸ் நீரிணை மீதான முற்றுகை நடவடிக்கை தொடரும் என்று அவர் கூறியுள்ளார். எனினும், டிரம்ப் அறிவிப்பை நிராகரித்த ஈரான், தாங்கள் தாக்குதலை முன்னெடுக்கும் நேரம் வந்து விட்டது என்று கூறியிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அணுசக்தி ஒப்பந்த விவகாரத்தில் ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுப் படைகள் கடந்த பிப் 28ந்தேதி ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. இதனால் இரு தரப்புக்கும் இடையே கடும் போர் ஏற்பட்டு 6 வாரங்களாக தாக்குதல்கள் நீடித்தன. ஈரான் உச்சத் தலைவர் அயதுல்லா கமேனி உள்ளிட்ட அந்நாட்டின் முக்கியத் தலைவர்கள் பலர் அமெரிக்காவின் தாக்குதலில் பலியாகினர். ஈரானும் இதற்கு தக்க பதிலடி கொடுத்து வந்தது. ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியதால் சர்வதேச அளவில் எண்ணெய் வர்த்தகம் தடைப்பட்டு கச்சா எண்ணெய் விலை பன்மடங்கு உயர்ந்தது. இந்நிலையில் ஈரானை அடியோடு அழிக்கப் போவதாகக் கூறிய அமெரிக்க அதிபர் டிரம்ப் திடீரென மனம் மாறி 2 வார போர் நிறுத்த அறிவிப்பை வெளியிட்டார். குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் ஹோர்முஸ் நீரிணை திறக்கப்பட்டு லெபனான் மீதான தாக்குதல் காரணமாக மீண்டும் மூடப்பட்டது. இதையடுத்து, ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான முதல் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை பாகிஸ்தானில் உள்ள இஸ்லாமாபாத்தில் கடந்த ஏப் 11–ஆம்தேதி நடந்தது. 21 மணிநேரம் நீடித்த இந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

அடுத்த 20 ஆண்டுகளுக்கு அணு ஆயுத தயாரிப்பு நடவடிக்கைகளை ஈரான் நிறுத்திக் கொள்ள வேண்டும், செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஒப்படைக்க வேண்டும் என்று அமெரிக்கா விதித்த நிபந்தனைகளை ஈரான் ஏற்க மறுத்து விட்டது. எனினும், இஸ்ரேல் – லெபனான் இடையிலான 10 நாட்கள் போர் நிறுத்தம் எதிரொலியாக ஹோர்முஸ் நீரிணை மீண்டும் திறக்கப்பட்டதால், போர் நிறுத்தம் நீட்டிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில், அமெரிக்கா – ஈரான் இடையிலான 2 வார போர்நிறுத்தம் நேற்றுடன் (ஏப் 21) முடிவுக்கு வந்தது.

முன்னதாக, போர் நிறுத்த காலக்கெடு முடியும் முன்பாகவே இஸ்லாமாபாத்தில் இரு நாட்டு பிரதிநிதிகள் குழு சந்தித்து 2ம் கட்ட பேச்சுவார்த்தையில் பங்கேற்க திட்டமிட்டிருந்தனர். இஸ்லாமாபாத்தில் நடக்கும் பேச்சுவார்த்தையில் ஒப்பந்தம் ஏற்பட்டால் தானே பாகிஸ்தானுக்கு நேரடியாக செல்வதாக டிரம்ப் கூறியிருந்தார். எனினும், இந்த 2ம் கட்ட பேச்சுவார்த்தை திட்டமிட்டபடி நடக்கவில்லை. ஈரான் தரப்பு, அமெரிக்க பிரதிநிதிகள் உடனான பேச்சுவார்த்தைக்கு முன்வரவில்லை என்று கூறப்படுகிறது.

முன்னதாக, போர் நிறுத்தம் நிறைவடையும் முன்பாக செய்தியாளர்களிடம் பேசிய பாகிஸ்தான் தகவல் தொடர்பு மந்திரி கூறுகையில், பேச்சுவார்த்தையில் ஈரான் பங்கேற்குமா என்பது குறித்த பதிலுக்காக காத்திருக்கிறோம். அதற்குள் ஈரான் எடுக்கும் முடிவு மிக முக்கியமானது எனக் கூறினார். அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறுகையில், ஈரானுடன் ஒப்பந்தம் ஏற்படாமல் போனால் மீண்டும் தாக்குதலை முன்னெடுக்க தயாராக இருக்கிறேன். மீண்டும் குண்டு வீச்சு நடத்தப்படும் என்ற பயத்துடன் ஈரான் பேச்சுவார்த்தைக்கு முன்வருவது சிறந்தது. போர் நிறுத்தத்தை நீட்டிக்க எனக்கு விருப்பமில்லை. ஈரான் பேச்சுவார்த்தைக்கு முன்வராவிட்டால் நான் அங்கு செல்கிறேன். அவர்களுக்கு வேறு வழி கிடையாது. ஈரானின் கடற்படை,விமானப்படையை ஏற்கனவே வீழ்த்தி விட்டோம். எனவே, ஈரான் மீண்டும் வலுவான நாடாக மாற வேண்டும் எனில் அமெரிக்காவுடன் ஒப்பந்தம் செய்யும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் இவ்வாறு கூறினார்.

இந்நிலையில் இன்று (ஏப் 22) காலை 5 மணியுடன் ஏற்கனவே அறிவித்த போர் நிறுத்தம் முடிவுக்கு வந்தது.

ஆனால் ஈரான் தரப்பில் இருந்து பேச்சுவார்த்தைக்கு முன்வராததால் அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் தலைமையிலான குழு தங்கள் பாகிஸ்தான் பயணத்தை ரத்து செய்தது. தாக்குதல் நடத்துவோம் என்று கூறிய டிரம்ப் மீண்டும் தன் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு போர் நிறுத்தத்தை நீட்டிப்பதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக டிரம்ப் வெளியிட்டுள்ள அறிவிப்பில்கூறியதாவது, ஈரான் தரப்பில் அமைதிப் பேச்சுவார்த்தைக்கான ஒரு முன்மொழிவை சமர்ப்பிக்கும் வரை போர் நிறுத்தம் அமலில் இருக்கும். ஈரான் தலைமை இப்போது மோசமான பாதிப்பை எதிர்கொண்டு வருகிறது. அவர்கள் பேச்சுவார்த்தைக்கு தயாராகி வருவதற்கும், ஒரு முன்மொழிவை தயார் செய்வதற்கும் சிறிது கால அவகாசம் தருகிறேன்.

அதுவரை இந்த போர் நிறுத்தம் அமலில் இருக்கும்.

அதே நேரத்தில், ஹோர்முஸ் நீரிணையை அமெரிக்கா தொடர்ந்து தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்.

ஈரான் மீதான முற்றுகை நடவடிக்கை தொடரும் இவ்வாறு அவர் கூறியுள்ளார். முன்னதாக ஓமன் வளைகுடா பகுதியில் அமெரிக்காவின் முற்றுகையை மீறி ஈரானை நோக்கி சென்ற சரக்குக் கப்பலை அமெரிக்க கடற்படை சிறைப்பிடித்தது. இந்த சம்பவம் அமைதிப் பேச்சுவார்த்தையில் மேற்கொண்டு சிக்கலை ஏற்படுத்தியது என்று கூறப்படுகிறது.

இந்நிலையில் அமெரிக்கா – ஈரான் இடையிலான போர் நிறுத்தத்தை நீட்டிப்பதாகக் கூறிய அதிபர் டிரம்பின் அறிவிப்பை ஈரான் நிராகரித்துள்ளது. போர் நிறுத்த அறிவிப்பை ஈரான் அரசு ஏற்கவில்லை என்று கூறியுள்ளது.

ஈரான் நாட்டு நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாக் காலிபாவின் ஆலோசகர் இது குறித்து கூறுகையில், அமெரிக்கா அறிவித்துள்ள போர் நிறுத்த நீட்டிப்பு என்பது திடீர் தாக்குதலுக்கு தயாராவதற்கான ஒரு அரசியல் தந்திரம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஹோர்முஸ் நீரிணையை முற்றுகையிடுவதும், ஈரான் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்துவதும் வேறுபட்ட நடவடிக்கைகள் அல்ல. குறிப்பாக போர் நிறுத்தத்தை நீட்டிக்கும் டிரம்பின் அறிவிப்பில் எந்த அர்த்தமும் இல்லை. ஒரு போரில் தோல்வி அடையும் நிலையில் இருப்பவர்கள் நிபந்தனைகளை விதிக்க முடியாது. இப்போது ஈரான், அடுத்த கட்ட தாக்குதல் நடவடிக்கைகளுக்கான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய நேரம் வந்து விட்டது இவ்வாறு கூறியுள்ளார். இதனிடையே, ஈரான் உச்சத் தலைவர் மொஜ்தபா கமேனி தனது அதிகாரப்பூர்வ டெலிகிராம் பக்கத்தில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் மீது தாக்குதல் நடத்த ஈரான் தயாராக இருக்கிறது என்று அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

மேலும் ஈரான் நாட்டின் விமானப்படை முதல் கடற்படை வரை அனைவரும் எதிரிகளை வீழ்த்த தயாராக இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இதனால் மத்திய கிழக்கில் மீண்டும் போர் மேகம் சூழந்துள்ளது.

அமெரிக்கா – ஈரான் போர் தொடர்ந்தால் அது சர்வதேச அளவில் இன்னும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.



விபத்தில் சிக்கி அப்பளம் போல் நொறுங்கி கிடக்கும் காரை படத்தில் காணலாம்.

### ஓட்டு போடுவதற்காக வந்த போது

# கார்– ஆம்னி பஸ் நேருக்கு நேர் மோதி 3 பேர் பலி

## ஓசூர் அருகே விபத்து

**கிருஷ்ணகிரி,ஏப்.23–**
ஓசூர் அருகே இன்று கார்– ஆம்னி பஸ் நேருக்கு நேர் மோதியது. இதில் நாளை நடைபெற உள்ள தமிழக சட்டசபை தேர்தலில் ஓட்டு

போடுவதற்காக அந்த காரில் வந்த 3 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக இறந்தனர்.

தர்மபுரி மாவட்டம் பென்னாகரத்தை அடுத்த சிகரல அள்ளி கிராமத்தை சேர்ந்தவர் வீரமணி(25) . இவரது உறவினர்கள் அதே பகுதியை சேர்ந்த பிரதீப், மாரி. வீரமணி பெங்களூரில் சிப்ஸ் கடை நடத்தி வந்தார். அந்த கடையில் பிரதீப், மாரி ஆகியோர் வேலை செய்து வந்தனர்.

நாளை தமிழக சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது.

எனவே அத்தேர்தலில் ஓட்டு போடுவதற்காக பிரதீப், மாரி, வீரமணி மற்றும் சதீஸ்குமார் (25) ஆகியோர் நேற்றிரவு ஒரே காரில் பென்னாகரம் நோக்கி புறப்பட்டனர்.

இன்று அதிகாலை ஓசூர் அருகே உள்ள சாணமாவு பகுதியில் அந்த கார் வந்த போது, எதிர்திசையில் உடுமலைப் பேட்டையிலிருந்து ஓசூர் நோக்கி தனியார் ஆம்னிபஸ் ஒன்று வந்தது.

கண்ணிமைக்கும் நேரத்தில் அந்த பஸ்சும்– காரும் எதிர்பாராத விதமாக நேருக்கு நேர் பயங்கரமாக மோதின. இதில் அந்த கார் அப்பளம் போல் நொறுங்கியது.



இதனால் அந்த காரில் பயணம் செய்த பிரதீப், மாரி. வீரமணி ஆகிய 3 பேரும் சம்பவ இடத்திலேயே இடிபாடுகளில் சிக்கி, உடல் நசுங்கி பரிதாபமாக இறந்தனர். அவர்களுடன் பயணித்த சதீஸ்குமார் படுகாயமடைந்தார்.

விபத்தை அறிந்த அந்த பகுதியினர் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். உயிருக்கு போராடிய சதீஸ்குமாரை மீட்டு ஓசூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். விபத்தில் பலியான பிரதீப், மாரி, வீரமணி ஆகியோரின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தினர்.

விபத்து காரணமாக அந்த பகுதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. அதனை போலீசார்s சீரமைத்து இயல்பு நிலைக்கு கொண்டு வந்தனர்.

# காதலை தெரிவிப்பதாக கூறி அழைத்துச்சென்று காதலனைத் தீ வைத்து எரித்துக் கொன்ற காதலி

## பெங்களூரில் பயங்கரம்




**பெங்களூர், ஏப்.23:**
"வித்தியாசமாக காதலைச் சொல்கிறேன்" என்று ஆசையாக அழைத்து, காதலனின் கை, கால்களைக் கட்டிப் போட்டு உயிரோடு தீ வைத்து எரித்துக் கொன்ற காதலியின் செயல் பெங்களூருவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அந்த இளைஞர் அலறித் துடித்து உயிரிழப்பதைக் காதலி தனது செல்போனில் வீடியோ எடுத்தது போலீசாரையே உறைய வைத்துள்ளது.

தெற்கு பெங்களூரு அஞ்சனபுரா பகுதியைச் சேர்ந்த 27 வயது பிரேர்னா மற்றும் கிரண் ஆகிய இருவரும் ஒரு தனியார் தொலைத்தொடர்பு கடையில் சக ஊழியர்களாகப் பணியாற்றி வந்தனர். கடந்த ஒரு ஆண்டாகக் காதலித்து வந்த நிலையில், சமீபகாலமாக கிரண் தன்னைத் தவிர்ப்பதாகவும், திருமணம் செய்து கொள்ள மறுப்பதாகவும் பிரேர்னா சந்தேகமடைந்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த அவர், கிரணைத் தீர்த்துக்கட்டத் திட்டமிட்டுள்ளார்.

சம்பவத்தன்று வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் கிரணைத் தனது வீட்டிற்கு அழைத்த பிரேர்னா, "வெளிநாடுகளில் பிரபலமாக இருக்கும் ஒரு பாணியில் உனக்குத் திருமண ப் பிரபோசல் விருப்பத்தை தெரிவிக்கப் போகிறேன்" என ஆசையாகப் பேசியுள்ளார். இதனை நம்பிய கிரணின் கண்களைக் கட்டி, நாற்காலியில் அமர வைத்து கை, கால்களை இறுக்கமாகக் கட்டியுள்ளார். கிரண் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தபோதும், இது ஒரு விளையாட்டு என்று கூறி அவரைச் சம்மதிக்க வைத்துள்ளார். கண்கள் மற்றும் கைகள் கட்டப்பட்ட நிலையில் கிரண் காதலியின் 'சர்ப்ரைஸ்' அறிவிப்புக்காகக் காத்திருந்த போது, பிரேர்னா தான் மறைத்து வைத்திருந்த பெட்ரோலை அவர் மீது ஊற்றித் தீ வைத்துள்ளார். உடல் தீப்பற்றி கிரண் அலறியபோதும், அவரைக் காப்பாற்ற முயலாமல் அந்தப் பயங்கரக் காட்சியைத் தனது செல்போனில் வீடியோ எடுத்து ரசித்துள்ளார். கிரண் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து உயிரிழந்தார். தகவலறிந்து வந்த போலீசார் பிரேர்னாவைக் கைது செய்து விசாரித்ததில், தன்னை அலட்சியப்படுத்தியதால்ஏற்பட்ட ஆத்திரத்தில் இந்தக் கொலையைச் செய்ததை அவர் ஒப்புக்கொண்டார். இது குறித்துப் பேசிய துணைபோலீஸ் கமிஷனர் டி.எல். நாகேஷ், திட்டமிட்டு நடத்தப்பட்ட இந்தக் கொலையில் பிரேர்னா மீதான விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். காதலின் பெயரால் அரங்கேறிய இந்தச் சித்ரவதைக் கொலை பெங்களூரு மக்களிடையே கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

### மேற்கு வங்கத்தில் முதற்கட்டமாக

# 152 தொகுதிகளில் கடும் பாதுகாப்புடன் தேர்தல்

## மோட்டார் சைக்கிளில் செல்ல கட்டுப்பாடு

**கொல்கத்தா, ஏப்.23–**
மேற்கு வங்காள சட்டசபைக்கு 2 கட்டங்களாக தேர்தல் நடத்தப்படுகிறது. நாளை முதல் கட்டமாக 152 தொகுதிகளிலும், 29–ஆம் தேதி 142 தொகுதிகளிலும் வாக்குப் பதிவு நடத்தப்படுகிறது. நாளை முதல்கட்ட தேர்தல் நடைபெறும் நிலையில் எல்லா ஏற்பாடுகளும் முழு வீச்சில் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு உச்சப்படுத்தப்பட்டுள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டரில் செல்ல கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

அசாம், புதுச்சேரி, கேரளம் ஆகிய 3 சட்டசபைகளுக்கு 9–ஆம் தேதி ஏற்கனவே தேர்தல் நடத்தப்பட்டு விட்டது. நாளை தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளுக்கும், மேற்கு வங்காளத்தில் முதல் கட்டமாக 152 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெறுகிறது.

அதுமட்டுமல்லாமல் மகாராஷ்டிராவில் உள்ள பாராமதி, ரஹூரி ஆகிய தொகுதிகளிலும் குஜராத்தில் உள்ள உம்ரேஷ் தொகுதியிலும் நாளை இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

மேற்கு வங்காளத்தில் 34 ஆண்டுகளாக மார்க்சிஸ்ட் ஆட்சி நடைபெற்று வந்தது.

2011–ஆம் ஆண்டு மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்தது. இக்கட்சி தொடர்ந்து 3 தடவை வெற்றி பெற்றுள்ளது.

இப்போது 4–ஆவது தடவையாக ஆட்சியைப் பிடிக்க மம்தா பானர்ஜி தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளார். பா.ஜ.க.வும் ஆட்சியைக் கைப்பற்ற முனைப்பு காட்டி வருகிறது.

காங்கிரஸ் மற்றும் இடதுசாரி கட்சிகள் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

முதல் கட்ட தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் நேற்று மாலை 6 மணியுடன் பிரசாரம் ஓய்ந்தது. முதற்கட்டத் தேர்தலில் மொத்தம் 1,478 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். மொத்தம் 3.67 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

இதில் 1.89 கோடி பேர் ஆண்கள், 1.75 கோடி பேர் பெண்கள் ஆவார். மேற்கு வங்காளத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 4,378 வாக்குப் பதிவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு பணியில் 2.5 லட்சம் பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இது உச்சபட்ச அளவாகும். பவானிப்பூர் தொகுதியில் 2–ஆம் கட்டத்தின் போது வாக்குப் பதிவு நடக்கிறது. இத்தொகுதியில் மம்தா பானர்ஜியை எதிர்த்து பா.ஜ.க. சார்பில் சுவேந்து அதிகாரி போட்டியிடுகிறார்.

இத்தொகுதி தேசிய அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது.

போக்குவரத்து தொடர்பாக பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்க ப்பட்டுள்ளன. இரவில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டரில் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. மருத்துவ உதவி போன்றவற்றிற்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பகல் நேரத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டரில் செல்லவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. வாகனத்தின் பின்பகுதியில் குடும்ப உறுப்பினர்களை மட்டுமே அழைத்துச் செல்லலாம். வேறு யாரையும் அழைத்துச் செல்ல முடியாது.

நியாயமான, நேர்மையான முறையில் தேர்தலை நடத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது என்று தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் அறிவித்துள்ளார்.

எல்லா தொகுதிகளிலும் பதிவான வாக்குகள் மே 4–ஆம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

கடைசி கட்ட வாக்குப் பதிவு நிறைவடைந்த பிறகு ஏப்ரல் 29–ஆம் தேதி இரவு எக்சிட் போல் முடிவுகளை செய்தி சேனல்கள் ஒளிபரப்பும். இந்த எக்சிட் போல்கள் தேர்தல் முடிவு எப்படி இருக்கும் என்பதை தோராயமாக s பிரதிபலிக்கும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

### எம்.பி.க்களை அவதூறாக பேசினார்:

# மோடி மீது நடவடிக்கை எடுக்கக்கோரி சபாநாயகரிடம் உரிமை மீறல் நோட்டீஸ்

**புதுடெல்லி, ஏப்.23–**
''நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போது எம்.பி.க்களை பிரதமர் மோடி அவதூறாகப் பேசியுள்ளார். எனவே, அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று காங்கிரஸ் சார்பில் மக்களவை சபாநாயகரிடம் உரிமை மீறல் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாகக் காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவுக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது: ஏப்ரல் 17ம் தேதி மக்களவையில் அரசியலமைப்பு (131வது திருத்தம்) மசோதா, 2026 தோற்கடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஏப்ரல் 18ம் தேதி பிரதமர் மோடி தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதி, தனது கடமையைச் செய்வதைக் கேள்விக்கு உட்படுத்துவது தனிப்பட்ட தாக்குதல் மட்டுமல்ல, அது நாடாளுமன்றத்தின் அதிகாரம் மற்றும் நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகள் மீதான நேரடி அவமதிப்பாகும்.. எனவே, எம்.பி.க்கள் மீது அவதூறு சுமத்தியதற்காக, பிரதமர் மோடி மீது மக்களவை விதி 222ன் கீழ் உரிமை மீறல் நோட்டீஸ் வழங்குகிறேன்.

புனிதம் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரசியலமைப்பு பாதுகாப்புகளை நிலைநிறுத்த, சபாநாயகர் ஆகிய நீங்கள் இந்த விவகாரத்தில் உடனடி மற்றும் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இது போன்ற விதிமீறல்கள் புறக்கணிக்கப்படவோ அல்லது மீண்டும் நிகழவோ கூடாது. இவ்வாறு கே.சி.வேணுகோபால் கூறியுள்ளார்.

# அமெரிக்கா - ஈரான் போர் நிறுத்தம் நீட்டிப்பு

## ட்ரம்ப் அறிவிப்பு



வாஷிங்டன்,ஏப்.23–
அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான இடைக்கால போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் டொனல்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தின. இதைத் தொடர்ந்து இஸ்ரேல் மற்றும் வளைகுடாவில் உள்ள அமெரிக்க நேச நாடுகள் மீது ஈரான் பதில் தாக்குதல் நடத்தியது. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது. இந்நிலையில், அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இரண்டு வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இந்த போர் நிறுத்தம் இன்றுடன் (ஏப்.22) நிறைவடைகிறது. இந்த சூழலில் ட்ரம்ப் இதனை நீட்டித்துள்ளார்.

இது தொடர்பாக ட்ரூத் சோஷியல் சமூக வலைதளத்தில் ட்ரம்ப் பதிவிட்டுள்ளார். ''ஈரான் உடனான போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுகிறது. அமைதி ஒப்பந்தம் சார்ந்து ஒருங்கிணைந்த முன்மொழிவை ஈரான் முன்வைக்கும் வரையில் இந்த போர் நிறுத்தம் தொடரும். அதே நேரத்தில் ஈரான் துறைமுகங்கள் முற்றுகையிட்டுள்ள அமெரிக்க ராணுவத்தின் பணியை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு நான் கூறியுள்ளேன்,'' என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட்டதை பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் வரவேற்றுள்ளார். இருப்பினும் இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை மேற்கொள்ள அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ், பாகிஸ்தான் செல்ல இருந்த திட்டத்தை ஒத்திவைத்துள்ளதாக அமெரிக்க அரசு கூறியுள்ளது. இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ளும் நடவடிக்கையை பாகிஸ்தான் மேற்கொண்டது. அதை ஈரான் நிராகரித்து வருகிறது.

முன்னதாக, ஈரானுடனான போர் நிறுத்தத்தை நீட்டிக்க அமெரிக்கா விரும்பவில்லை என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சொல்லியிருந்தார். இது தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் தெளிவாக விளக்கமளித்தார். ஈரானோடு ஒப்பந்தம் ஏதும் ஏற்படவில்லை என்றால் மீண்டும் தங்கள் தரப்பு தாக்குதலை தொடங்கும் என அவர் தெரிவித்திருந்தார்.

''அமெரிக்காவுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளாவிட்டால், ஈரானில் குண்டு மழை பொழியும்'' என்று அதிபர் டொனால்டு ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல் அமெரிக்கா இஸ்ரேல் கூட்டுப் படைகள் ஈரான் மீது தாக்குதல் நடத்தி வருகின்றன. ஈரானும் இஸ்ரேல் மற்றும் வளைகுடா பகுதிகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது. கடந்த 8-ம் தேதி இருதரப்புக்கு இடையே 2 வாரங் களுக்கு போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டது. இதனிடையே கடந்த 11, 12-ம் தேதிகளில் அமெரிக்கா - ஈரான் பிரதிநிதிகள் இடையே பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.

இதைத் தொடர்ந்து இஸ்லாமாபாத்தில் 2-ம் சுற்று பேச்சுவார்த்தையை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அணு ஆயுதம், ஹார்முஸ் ஜலசந்தி கட்டுப்பாடு, லெபனான் போர் நிறுத்தம் உள்ளிட்ட விவகாரங்களில் இரு தரப்புக்கும் இடையே ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. இதனால் 2-ம் சுற்று பேச்சுவார்த்தை தள்ளி வைக்கப்பட்டு வருகிறது.

இந்தச் சூழலில் அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாப் தலைமையிலான குழுக்கள் இஸ்லாமாபாத்தில் இன்று பேச்சுவார்த்தை நடத்தக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், பேச்சுவார்த்தையில் பங்கேற்பது குறித்து முடிவு எடுக்கவில்லை என்று ஈரான் தலைவர்கள் தொடர்ந்து கூறி வருகின்றனர். இதனால் 2-ம் சுற்று பேச்சுவார்த்தை நடைபெறுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

இந்தச் சூழலில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் நேற்று கூறியதாவது:

ஈரானுக்கு எதிரான போரில் அமெரிக்கா மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறது. இந்தப் போரில் அமெரிக்க ராணுவம் அசாத்திய துணிச்சலை வெளிப்படுத்தி உள்ளது. ஆனால், நியூயார்க் டைம்ஸ், வால் ஸ்ட்ரீட் ஜர்னல் உள்ளிட்ட நாளிதழ்கள் பொய் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. ஈரான் கடற்படை, விமானப் படைகள் முழுமையாக அழிக்கப்பட்டு உள்ளன. ஈரானின் அணு சக்தி தளங்கள் தகர்க்கப்பட்டு உள்ளன. அந்த நாட்டின் மூத்த தலைவர்கள் கொல்லப்பட்டு உள்ளனர்.

மனிதாபிமான அடிப்படையில் அமெரிக்கா - ஈரான் இடையே தற்காலிக போர்நிறுத்தம் அமலில் உள்ளது. இந்த போர் நிறுத்தம் புதன் கிழமையுடன் (இன்று) நிறைவடைகிறது. அதற்குள் அமெரிக்காவுடன் ஈரான் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும். இல்லையெனில் ஈரான் முழுவதும் குண்டு மழை பொழியும். அந்த நாட்டின் மீது தாக்குதல் நடத்த துளியும் தயங்க மாட்டோம்.

போர் நிறுத்தத்தை நீட்டிக்கும் திட்டம் இல்லை. என்னைப் பொறுத்த வரை இஸ்லாமாபாத் பேச்சுவார்த்தையில் ஈரான் பிரதிநிதிகள் கண்டிப்பாக பங்கேற்பார்கள். இல்லையெனில் அதற்கான விளைவுகளை அந்த நாடு சந்திக்கும். ஈரானிடம் அணு ஆயுதங்கள் இருக்கக் கூடாது என்பதில் மிகவும் உறுதியாக இருக்கிறோம். இதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இவ்வாறு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரான் ராணுவத்தின் பிரதான படைப் பிரிவான இஸ்லாமிய புரட்சிகர படை (ஐஆர்ஜிசி) அந்த நாட்டை நிர்வகித்து வருகிறது. ஐஆர்ஜிசி படையுடன் மிக நெருங்கிய தொடர்பில் உள்ள ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாப், அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸுடன் முதல் கட்ட பேச்சுவார்த்தை நடத்தினார்.

இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை குறித்து சமூக வலைதளத்தில் அவர் நேற்று வெளியிட்ட பதிவில், ''ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்தை அமெரிக்கா முடக்கி உள்ளது. மேலும் போர் நிறுத்தத்தையும் மீறி வருகிறது. அழுத்தம், மிரட்டல்களுக்கு நடுவில் அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க முடியாது. போருக்கு நாங்கள் மீண்டும் தயாராகி வருகிறோம். போர்க்களத்தில் புதிய ஆயுதங்களை களமிறக்குவோம்'' என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரானை வரவழைக்க பாகிஸ்தான் முயற்சி: பாகிஸ்தான் தகவல் துறை அமைச்சர் அத்தாவுல்லா தாரர் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், ''அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம், அமெரிக்க நேரப்படி ஏப்ரல் 22-ம் தேதி அதிகாலை 4.50 மணிக்கு (இந்திய நேரப்படி ஏப். 22 மாலை 5.20) நிறைவடைகிறது.

இஸ்லாமாபாத் அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க ஈரானுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது. ஆனால் ஈரான் தரப்பில் இருந்து பதில் வரவில்லை. ஈரான் பிரதிநிதிகளைப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க செய்ய பாகிஸ்தான் தீவிர முயற்சிகளை செய்து வருகிறது'' என்று தெரிவித்துள்ளார்.

இந்தப் போரால் உலகம் முழுவதும் பெட்ரோல், டீசல், காஸுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் விமானப் பெட்ரோலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

அமெரிக்கா - ஈரான் இடையிலான போரை முடிவுக்கு கொண்டு வர ஐரோப்பிய நாடுகள், வளைகுடா நாடுகள், சீனா உள்ளிட்டவை தொடர் அழுத்தம் கொடுத்து வருகின்றன.

இது தொடர்பாக அமெரிக்கா, ஈரான் தரப்பிடம் பல்வேறு நாடுகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் சமரச பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். இதன் பயனாக அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் நிறுத்தம் மேலும் இரு வாரங்களுக்கு நீட்டிக்கப்பட வாய்ப்பு இருப்பதாகவும், ஹார்முஸ் ஜலசந்தி திறக்கப்பட வாய்ப்பு இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

### எரிபொருள் நெருக்கடியால்

# வங்கதேசத்தில் மொபைல் சேவை முற்றிலும் முடங்கும் அபாயம்




டாக்கா,ஏப்.23–
மேற்காசிய போர் காரணமாக ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறையால் வங்கதேசத்தில் மொபைல் போன் நெட்வொர்க் பெருமளவில் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வங்கதேச நாடானது எண்ணெய் மற்றும் எரிவாயுவில் சுமார் 95% மேற்காசியாவில் இருந்தே இறக்குமதி செய்து வருகிறது. ஹோர்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்து இன்னும் சீராகாததால் வங்கதேச நாட்டிற்கு தேவையான பெட்ரோல், டீசல் உரிய அளவு கிடைக்கவில்லை. இதனால் அந்நாட்டின் பொதுமக்கள் பெரும் சிரமத்தை சந்தித்து வருகின்றனர்.

இந்த சூழலில் வங்கதேச நாட்டில் மின்வெட்டும் அதிகரித்து உள்ளதால் மொபைல் டவர்களை இயக்க தினமும் 1 லட்சம் லிட்டர் எரிபொருள் தேவைப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. ஆனால் எரிபொருள் பற்றாக்குறை உள்ளதால் மொபைல் அழைப்புகள் மற்றும் இணைய சேவை பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. வங்கதேச நாட்டில் எரிபொருள் பற்றாக்குறையில் இதே நிலை தொடர்ந்தால் அந்த நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரம், மொபைல் மூலம் மேற்கொள்ளப்படும் பண பரிவர்த்தனைகள், இ-காமர்ஸ் சேவை உள்ளிட்ட பல முக்கிய விசஷயங்களில் பெரும் பாதிப்பு ஏற்பட கூடும் என தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

வங்கதேச மொபைல் தொலைத்தொடர்பு இயக்குநர்கள் சங்கம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் தரவு மையங்கள் உள்ளிட்ட செயல்பாடுகளை இயக்குவதற்குத் தேவையான எரிபொருள் இன்றி, தொலைத்தொடர்புச் செயல்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது சாத்தியமாக இருக்காது என்று குறிப்பிட்டுள்ளது. தரவு மையங்கள் அத்தியாவசிய டீசல் கையிருப்பைக் கொண்டு இயங்குவதாலும், ஹோர்முஸ் ஜலசந்தியில் இயல்பு நிலை திரும்புவதாலும் முழுமையான டிஜிட்டல் முடக்கம் ஏற்படக்கூடும் என அஹுகூஙூஆ எச்சரித்து உள்ளது. வங்கதேச மொபைல் தொலைத்தொடர்பு இயக்குநர்கள் சங்கம் (அஹுகூஙூஆ) வெளியிட்டுள்ள அறிவிப்பில் அரசின் உடனடித் தலையீடு இல்லாவிட்டால், தொலைத்தொடர்பு சேவைகளைத் தொடர்ந்து கொடுப்பது என்பது இயலாத காரியமாகிவிடும் என்றும் குறிப்பிட்டிருந்தது. சுமார் 17 கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்த தெற்காசிய நாடு, தற்போதைய புவிசார் அரசியல் நிலையற்ற தன்மையால் அதிகம் பாதிக்கப்பட கூடிய நிலையில் உள்ளது .கணிடூடிஞுடிஞிண்

வங்கதேசத்தின் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் 12 மணி நேரம் வரை நீண்ட வரிசைகள் காணப்படுவதாக அங்கிருந்து வெளியாகி வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதே நேரத்தில், விநியோகப் பற்றாக்குறையைச் சமாளிக்கும் நடவடிக்கையாக, அந்நாட்டின் அரசு சமீபத்தில் டீசல் விலையை 15% வரை உயர்த்தியது குறிப்பிடத்தக்கது.

# ஏவுகணை தயாரிக்க உதவும் ரசாயனங்களை ஈரானுக்கு அனுப்பிய சீனா



வாஷிங்டன்,ஏப்.23–
ஏவுகணைகள் தயாரிக்க உதவும் ரசாயனங்களை ஈரானுக்கு சீனா அனுப்பியுள்ளது என்று அமெரிக்காவிலுள்ள குடியரசுக் கட்சியின் நிர்வாகி நிக்கி ஹாலே தெரிவித்துள்ளார். மேலும் இதற்கான ஆதாரங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்து முடங்கியுள்ளது. இந்நிலையில் அமெரிக்காவுக்கான ஐ.நா. தூதராக பணியாற்றியவரும், தற்போது அதிபர் டொனால்டு ட்ரம்ப் சார்ந்த குடியரசு கட்சியின் நிர்வாகியுமான நிக்கில ஹாலே எக்ஸ் சமூக வலைதளத்தில் சில ஆதாரங்களை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது: சிறைபிடிக்கப்பட்ட கப்பலில் இருந்து ஏவுகணைகள் தயாரிக்க பயன்படுத்தப்படும் மிக முக்கியமான ரசாயனங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இது சீனாவிலிருந்து ஈரானுக்கு ரகசியமாக அனுப்பி வைக்கப்பட்டவை. இது தொடர்பான சில புகைப்படங்கள் மற்றும் ஆதாரங்களை சமர்ப்பித்துள்ளேன். ஈரான் தனது ரகசியத் திட்டங்களை மறைப்பதற்காக சீனாவைப் பயன்படுத்திக் கொள்கிறதா என்ற கேள்வி எழுகிறது. கப்பலில் இருந்த ரசாயனப் பொருட்கள் சீன நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டதற்கான முத்திரைகள் இருக்கின்றன. இதன் மூலம் உலக நாடுகளை ஈரான் ஏமாற்றி வருகிறது.

ஈரானின் இந்த நடவடிக்கை அணுசக்தி ஒப்பந்தத்தை மீறுவது மட்டுமல்லாமல், உலக அமைதிக்கே ஒரு மிகப்பெரிய சவாலாக உள்ளது. அமெரிக்காவின் நட்பு நாடுகளை அச்சுறுத்தும் வகையில் ஈரான் தனது ஏவுகணைத் திட்டத்தை வலுப்படுத்தி வருவதை அமெரிக்கா ஒருபோதும் அனுமதிக்காது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இந்த அதிரடி சோதனை மற்றும் கப்பல் சிறைபிடிப்பு நடவடிக்கைக்கு ஈரான் கடும் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், நிக்கி ஹாலேயின் இந்த அறிவிப்பு ஈரான் நாட்டுக்கு மேலும் நெருக்கடியை கொடுத்துள்ளது. அதே நேரத்தில், அமெரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டுகளை ஈரான் முற்றிலும் மறுத்துள்ளது. அமெரிக்கா திட்டமிட்டு ஒரு நாடகத்தை அரங்கேற்றி வருவதாகவும், அந்தக் கப்பலில் சாதாரணமான வணிகப் பொருட்கள் மட்டுமே இருந்ததாகவும் ஈரான் தரப்பில் விளக்கம் தரப்பட்டுள்ளது. நிக்கி ஹாலேவின் கூற்றுக்கு சீன நாடும் மறுப்பு தெரிவித்துள்ளது.

# 2-வது ஈரான் கப்பலை கைப்பற்றிய அமெரிக்கா

வாஷிங்டன்,ஏப்.23–
கடந்த 19-ல் ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் ஈரானின் தவுஸ்கா சரக்கு கப்பலை அமெரிக்க கடற்படை கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து டிபானி என்று பெயரிடப்பட்ட மற்றொரு ஈரானிய எண்ணெய் கப்பலை அமெரிக்க கடற்படை நேற்று கைப்பற்றியது. இந்த எண்ணெய் கப்பல் 330 மீட்டர் நீளம் கொண்டது. 3 லட்சம் டன் கச்சா எண்ணெயை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டது. ஈரான் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட டிபானி கப்பல் சிங்கப்பூரை நோக்கி சென்று கொண்டிருந்தது. அமெரிக்க கடற்படை வீரர்கள் நேற்று ஹெலிகாப்டர்கள் மூலம் டிபானி கப்பலில் இறங்கி அந்த கப்பலை கைப்பற்றினர். இதுதொடர்பான வீடியோவை அமெரிக்க கடற்படை வெளியிட்டு உள்ளது. அதோடு வெளியிடப்பட்ட பதிவில், ''பொருளாதார தடை விதிக்கப்பட்ட ஈரான் கப்பலை சர்வதேச கடல் பகுதியில் கைப்பற்றினோம். தடை செய்யப்பட்ட எண்ணெய் கப்பல்களின் போக்குவரத்தை அனுமதிக்க மாட்டோம்'' என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஈரானின் சரக்கு, எண்ணெய் கப்பல்களை கைப்பற்றுவது போர் நிறுத்த மீறல் ஆகும் என்று அந்த நாட்டு தலைவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், ''போர் நிறுத்தத்தை பலமுறை ஈரான் மீறியிருக்கிறது'' என்று குறிப்பிட்டு உள்ளார்.

# 8 பெண்களுக்கு மரண தண்டனை விதித்த ஈரான்

## விடுவிக்க ஈரானுக்கு டிரம்ப் திடீர் கோரிக்கை



வாஷிங்டன்,ஏப்.23–
ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28ஆம் தேதி தாக்குதலை துவக்கி நடத்தின. இதில் 2000-திற்கும் மேற்பட்டோர் பலியானார்கள் இந்த தாக்குதல் 40 நாட்களாக நீடித்து வந்த நிலையில் கடந்த 8ஆம் தேதி இரண்டு வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது இதனால் பதற்றம் சற்று தணிந்தது.

ஆனால் ஈரான், அமெரிக்க இடையே நிரந்தர போர் நிறுத்தத்திற்காக பாகிஸ்தானில் 21 மணிநேர தொடக்கக்கட்ட அமைதி பேச்சு வார்த்தையில் உடன்பாடு எதுவும் முடிவாகவில்லை. இரண்டு வார கால போர் நிறுத்தத்திற்கான காலக்கெடு முடிவடைய உள்ள நிலையில் இந்த அமைதி பேச்சுவார்த்தை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இந்த சூழலில் ஈரானில் தூக்கு தண்டனையை எதிர்கொள்ளும் பெண்களை விடுவிக்குமாறு டிரம்ப் கூறியுள்ளார். சமூக ஊடக ஆர்வலரான இயால் யாகோபி வெளியிட்ட புகைப்படம் ஒன்றில் ஈரானில் உள்ள 8 பெண்கள் தூக்குத் தண்டனை எதிகொள்ள கூடிய சூழலில் உள்ளனர் என தெரிவித்திருந்தார். அவர்களுடைய புகைப்படங்களையும் அவர் வெளியிட்டிருந்தார்.

இயால் யாகோபி வெளியிட்ட பதிவு டிரம்ப்பின் கவனத்தை ஈர்த்ததுள்ளது, அதனை தன்னுடைய எக்ஸ் சமூக வலைத்தளத்தில் பதிவிட்ட டிரம்ப் ஈரானுடைய பிரதிநிதிகளுடன் விரைவில் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ள ஈரான் தலைவர்களே இந்த பெண்களை விடுதலை செய்யுங்கள், நான் உங்களை பெரிது பாராட்டுவேன். நீங்கள் விடுவித்த பின்னர் உண்மையை அவர்கள் மதிப்பார்கள் என நான் உறுதியாக கூறுகிறேன் தயவு செய்து அவர்களுக்கு எந்த தீங்கும் ஏற்படுத்த வேண்டாம் அது நமது பேச்சு வார்த்தைக்கு மிக பெரிய தொடக்கமாக அமையும்.

இந்த 8 பெண்களில் பெரும்பாலோர் இந்த ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற அரசுக்கு எதிரான போராட்டங்களின் போது கைது செய்யப்பட்டவர்கள். அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் வெடிகுண்டுகளை பயன்படுத்துதல், கான்கிரீட் கற்கள் போன்ற பொருட்களை எறிதல், போராட்டத்தில் பங்கேற்பது, காயப்பட்ட போராட்டக்காரர்களுக்கு உதவுவது மற்றும் தேசிய பாதுகாப்பை சீர்குலைத்தல் ஆகியவை அடங்கி இருக்கிறது.

இதுவரை இந்த 8 பெண்களின் அடையாளங்கள் அல்லது அவர்கள் மீது உள்ள வழக்குகள் குறித்து எந்த அதிகாரப்பூர்வ உறுதிபடுத்துதலும் வெளியாகவில்லை.

மேலும் அவர்களை விடுதலை செய்யுமாறு டிரம்ப் வைத்த கோரிக்கைக்கு ஈரான் இதுவரை பதிலளிக்கவில்லை என தெரிய வருகிறது.

# நேபாள புதிய அரசுக்கு எதிராக மக்கள் போராட்டம் காரணம் என்ன?

காத்மாண்டு,ஏப்.23–
நேபாளநாட்டில் மக்கள் போராட்டத்தை எதிர்கொண்டுள்ளது கடந்த மாதம் புதிதாக ஆட்சிக்கு வந்த பிரதமர் பாலேந்திர ஷா தலைமையிலான அரசு. அதற்கான காரணம் என்ன என்பது குறித்து பார்ப்போம்.

கடந்த மாதம் 27-ம் தேதி நேபாள பிரதமராக 35 வயதான பாலேந்திர ஷா பதவியேற்றார்.

இந்நிலையில், அவரது அரசு மக்களின் எதிர்ப்பை பெற்றுள்ளது. கடந்த ஆண்டு அங்கு சர்மா ஒலி தலைமையிலான அரசு, கவிழ்ந்தது. இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது ஜென் ஸீ தலைமுறையினரின் போராட்டம். அதன் பின்னர் இடைக்கால நேபாள அரசை சுசிலா கார்கி வழிநடத்தினார். இதன் பின்னர் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பாலேந்திரா ஷா வெற்றி பெற்று பிரதமர் ஆனார்.

அவரது ஆட்சி அமைந்து ஒரு மாத காலம் கூட பூர்த்தியாகாத நிலையில் மக்களின் எதிர்ப்பை பெற்றுள்ளது. நாடு முழுவதும் மக்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தகவல். இந்தியாவிலிருந்து கொண்டுவரப்படும் 100 ரூபாய்க்கு கூடுதலான மதிப்பு கொண்ட பொருட்களின் மீது கட்டாயச் சுங்க வரியை விதிக்கும் அரசின் முடிவு, அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய மாணவர் அமைப்புகளை தடை செய்யும் அரசின் கொள்கை மற்றும் உள்துறை அமைச்சர் சுதான் குருங் மீதான சொத்து குவிப்பு வழக்கு மற்றும் நிதி முறைகேடு காரணமாக அவர் பதவி விலக வேண்டியும் நேபாளத்தில் போராட்டம் நடைபெற்றது வருகிறது.

புதிய அரசின் சுங்க வரிக் கொள்கை எல்லையோரத்தில் வசிக்கும் சாமானிய மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் என நேபாள மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இப்படி ஒரே நேரத்தில் அரசின் கொள்கை, மாணவர் அமைப்பினர் மற்றும் அமைச்சர் மீதான குற்றச்சாட்டு என்று மூன்று விதமான அழுத்தங்களை பாலேந்திர ஷாவின் அரசு எதிர்கொண்டுள்ளது.

# சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.400 குறைந்து ரூ.1,14,000க்கு விற்பனை



சென்னை: சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.50 குறைந்து ஒரு கிராம் ரூ.14,250 க்கு விற்பனைண்யாகிறது. ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ 4 00 குறைந்து ஒரு சவரன் ரூ.1,14,000 க்கு விற்பனையாகிறது. சென்னையில் வெள்ண்ளி விலை ஒரு கிராம் ரூ.5 உயர்ந்து ரூ.275 க்கு விற்ண்பனை செய்யப்படுகிண்றது.

# பெட்ரோல் விலை ரூ.100.84, டீசல் விலை ரூ.92.39க்கு விற்பனை




சென்னை: பெட்ரோல் மற்றும் டீசல் விலை தினமும் மாற்றி அமைக்கப்படுகிறது. அதன் அடிப்படையில் இன்றைய பெட்ரோல் விலை சென்னையில் லிட்டருக்கு ரூ.100.84 ஆகவும், டீசல் விலை லிட்டருக்கு ரூ.92.39 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இயற்கை எரிவாயுவின் விலை லிட்டருக்கு ரூ.91.50ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விலை இன்று காலை 6 மணி முதல் அமலுக்கு வந்தது.

# சதகுப்பை கீரையின் நன்மைகள்



மருத்துவ குணங்கள்!

சதகுப்பையின் மருத்துவ குணங்கள்

★ மூச்சுதிணறல் மற்றும் இருமல் போன்ற பிரச்னைகளுக்கு நல்ல தீர்வாக சதகுப்பை திகழ்கிறது.

★ முதுகுவலி மற்றும் மூட்டு வலி உள்ளிட்ட பிரச்னைகளுக்கு நல் ல மருந்தாக செயல்படுகிறது.

★ செரிமானம் தொடர்பான அனைத்து பிரச்னைகளையும் சரிசெய்யக்கூடிய தன்மை சதகுப்பை கீரைக்கு உண்டு. ஊடுணிணுச் - ஊச்தணச்

★பசியை தூண்டக்கூடியது.

★சைனஸ், தலைவலி, காதுவலி போன்றவற்றிற்கு தீர்வு அளிக்கக் கூடியது.

★ஆன்டி ஆக்ஸிடன்டுகள் நிறைந்து சதகுப்பையில் உள்ளதால் உடல் ஆரோக்கிய மேம்பட உதவுகிறது.

★நுரையீரலில் தேங்கியுள்ள மாசுக்களை நீக்கி சுவாச மண்டலச் செயல்பாட்டினை மேம்படுத்த உதவுகிறது.

★நார்ச்சத்து மிகுதியாக கீரைகளில் உள்ளதால் மலச்சிக்கல் பிரச்னைக்கு உகந்தது.

★ வைட்டமின் சி மற்றும் பி சதகுப்பையில் இருப்பதினால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கவும் செல்களின் ஆக்ஸிடேட்டிவ் ஸ்டிரஸை குறைக்கவும் உதவுகிறது.

★குறிப்பாக கருப்பை சார்ந்த நோய்களை தீர்ப்பதாக அறிவியல் ஆய்வுகள் கூறுகின்றன.குஞிடினுணஞ்னு

★ரத்த அழுத்தத்தை குறைத்து நம்மை பாதுகாக்க உதவுகிறது.

★நீரிழிவு நோயினை கட்டுப்படுத்தவும் உதவுகிறது.

பயன்படுத்தும் முறை

ச தகுப்பை கீரையை சூப், பொரியல் மற்றும் சாலட் போன்ற உணவுகளில் சேர்த்துக்கொள்ளலாம்.குழந்தைகளுக்கு எளிதில் செரிமானம் ஆக சாதாரண ரசத்துடன் சிறிது சதகுப்பை இலையினைக் சேர்க்கலாம். வெந்தயக்குழம்பு, காரக்குழம்பு செய்யும்பொழுது கடைசியாக சிறிது சதகுப்பை இலை தூவினால் வாசனை மிகுதியாக இருக்கும். வாயுத் தொல்லையால் அவதிபடுபவர்கள் சதகுப்பையை நீரில் கொதிக்க வைத்து சூடாக பருகலாம். உடனே நிவாரணம் கிடைக்கும்.

குழந்தைகள் வயிற்று வலியால் அவதிப்படும்போது, சதகுப்பை கீரை சாறு 20 மி.லி. அளவுக்கு எடுத்து, ஒரு தேக்கரண்டி தேனுடன் கலந்து கொடுத்தால், வலி நீங்கும். பிரசவித்த தாய்மார்களுக்கு இந்த கீரையை சமைத்து கொடுத்தால் கருப்பை அழுக்குகள் வெளியேறும். ஜீரணமும் சீராகும்.

மாதவிடாய் சுழற்சி சரியாக அமையாமல் அவதிப்படுகிறவர்கள், மாதவிடாய் ஆரம்பிப்பதற்கு பத்து நாட்களுக்கு முன்னரே சதகுப்பை, எள், கருஞ்சீரகம் போன்றவற்றை சம அளவு எடுத்து லேசாக வறுத்து பொடி செய்து ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து பனைவெல்லத்துடன் கலந்து உருண்டை செய்து தினம் இருவேளை சாப்பிட்டுவர வேண்டும். இதன் மூலம் மாதவிடாய் சுழற்சி சீராகும். அந்த காலகட்டத்தில் ஏற்படும் வலியும், சோர்வும் நீங்கும். கருப்பையும் பலமடையும்.இன்றைய வேகமான வாழ்க்கையில் இயற்கை வழிகள் மறைக்கப்பட்டு போகும் நிலையில் சதகுப்பை போன்ற பாரம்பரிய மூலிகைகளை உணவில் சேர்த்துக் கொள்வது உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் சிறந்த வழியாகும்.

# முட்டைகோஸ் டோக்ளா

தேவையான பொருட்கள்



1கப் பொடியாக நறுக்கின முட்டைகோஸ் துருவல்
1/2கப் கடலை மாவு
1ஸ்பூன் மிளகாய்த்தூள்
1/2ஸ்பூன் மல்லித்தூள்
1/2, ஸ்பூன் மஞ்சள்தூள்
1/4 ஸ்பூன் பெருங்காயம்
உப்பு தேவைக்கு
தாளிக்க
1ஸ்பூன் கடுகு
1/2, ஸ்பூன் வெள்ள எள்ளு,
1ஸ்பூன் எண்ணெய், கறிவேப்பிலை
1ஸ்பூன் ஈனோ

செய்முறை

ஒரு பவுளில் கடலை மாவு, மிளகாய் தூள், மல்லிதூள், மஞ்சள்தூள், உப்பு போட்டு தேவையானதண்ணி விட்டு நன்கு கலந்துக்கவும்.1ஸ்பூன் ஈனோ சேர்த்து குடெ கொஞ்சம் தண்ணி விட்டு நன்றாக கலக்கவும். அத்துடன் எடுத்து வைத்திருக்கும் முட்டைகோஸ் துருவல் சேர்த்து கலந்து எண்ணெய் தடவிய தட்டில் விட்டு ஆவியில் வேக வைத்து எடுத்துக்கவும்.

ஒரு கடாயில் எண்ணெய் விட்டு காய்ந்தத்தும் கடுகு, ஜீரகம், வெள்ள எள்ளு, கறிவேப்பிலை, பெருங்காயம் தாளித்து டோக்ளா மேல் கொட்டி துண்டு போடவும். சுவையான முட்டைகோஸ் டோக்ளா நிமிஷத்தில் தயார்.

# அதிக உடல் வெப்பத்தின் அறிகுறிகள்



அதிகப்படியான உடல் சூட்டைப் புரிந்துகொள்வது

அதிகப்படியான உடல் வெப்பம், எனவும் அறியப்படுகிறது வெப்ப அழுத்தம் ணிஹு வெப்பமடைவதைஉடலின் உட்புற வெப்பநிலை இயல்பை விட அதிகமாக உயரும்போது , இது ஏற்படுகிறது. இது அசௌகரியம், சோர்வு, நீரிழப்பு மற்றும் மிகவும் கடுமையான உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும். பொதுவான காரணங்களில் வெப்பமான வானிலை, தீவிர உடல் செயல்பாடு, காரமான உணவுகள், தொற்றுகள் அல்லது சில உடல்நலப் பிரச்சினைகள் கூட அடங்கும்.

வியர்வை என்பது உடலை குளிர்விக்க இயற்கையான வழியாகும், ஆனால் தொடர்ச்சியான அல்லது அதிகப்படியான உடல் வெப்பத்திற்கு கவனம் தேவைப்படலாம். காரணங்களை அறிந்துகொள்வதும், எளிய வைத்தியம் மற்றும் வாழ்க்கை முறை மாற்றங்கள் மூலம் அதிகப்படியான உடல் வெப்பத்தை எவ்வாறு நிர்வகிப்பது என்பதைக் கற்றுக்கொள்வதும் உங்கள் உடலை சமநிலையுடனும் வசதியாகவும் வைத்திருக்க உதவும்.

அதிக வெப்பத்தின் அறிகுறிகள்

உங்கள் உடல் அதிக வெப்பமடையும்போது, உங்களுக்கு இது போன்ற அறிகுறிகள் ஏற்படலாம்:

அதிகப்படியான வியர்வை

தோல் வெடிப்பு அல்லது எரிச்சல்

விரைவான இதய துடிப்பு

மயக்கம் அல்லது லேசான தலைச்சுற்றல்

வறண்ட வாய் மற்றும் நீர்ச்சத்து இழப்பு

தசைப்பிடிப்பு

குமட்டல் அல்லது வாந்தி

உணர்வு சூடான அல்லது சிவந்த சாதாரண சூழ்நிலைகளில் கூட

இந்த அறிகுறிகளை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம், குளிர்ச்சியடையவும், வெப்ப சோர்வு அல்லது வெப்ப பக்கவாதம் போன்ற கடுமையான நிலைமைகளைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கலாம்.

நீங்கள் அடிக்கடி அதிக வெப்பமடைதல் அல்லது தொடர்புடைய அசௌகரியத்தை அனுபவித்தால், எங்கள் மருத்துவரை அணுகவும். பொது மருத்துவ நிபுணர்கள் சரியான நேரத்தில் மதிப்பீடு மற்றும் சிகிச்சைக்காக.

நம்பகமான நிபுணர்களிடமிருந்து இரண்டாவது கருத்தைப் பெற்று,

நம் பிக்கையான, தகவலறிந்த முடிவுகள்.

இரண்டாவது கருத்தைப் பெறுங்கள்

அதிகப்படியான உடல் உஷ்ணத்திற்கான காரணங்கள்

அதிகப்படியான உடல் வெப்பம் பல்வேறு வாழ்க்கை முறை, சுற்றுச்சூழல் மற்றும் உடல்நலம் தொடர்பான காரணிகளால் ஏற்படலாம்:

உடல் செயல்பாடு

நீங்கள் தீவிர உடற்பயிற்சியில் ஈடுபடும்போது, குறிப்பாக வெப்பமான காலநிலையில், உங்கள் உடல் வெப்பநிலை உயரக்கூடும். உங்கள் தசைகள் வெப்பத்தை உருவாக்குகின்றன, மேலும் உங்கள் உடல் விரைவாக குளிர்விக்க முடியாவிட்டால், நீங்கள் மிகவும் சூடாகவோ அல்லது அதிக வெப்பமாகவோ உணர ஆரம்பிக்கலாம்.

சுற்றுச்சூழல் காரணிகள்

வெப்பமான வானிலை, அதிக ஈரப்பதம் மற்றும் நேரடி சூரிய ஒளி ஆகியவை உங்களை இன்னும் சூடாக உணர வைக்கும். வெளியே சூடாக இருக்கும்போது, உங்கள் உடல் அதன் வெப்பநிலயை இயல்பாக வைத்திருக்க கூடுதல் கடினமாக உழைக்க வேண்டியிருக்கும், இது அதிக வெப்பத்தை உணர வழிவகுக்கும்.

ஹார்மோன் மாற்றங்கள்

ஹார்மோன் ஏற்ற இறக்கங்கள்குறிப்பாக மாதவிடாய் காலத்தில் பெண்களுக்கு, வெப்பத் தாக்கம் மற்றும் அதிகப்படியான உடல் வெப்பத்தை ஏற்படுத்தும். இந்த மாற்றங்கள் உங்கள் உடலின் வெப்பநிலையை திறம்பட கட்டுப்படுத்துவதை கடினமாக்கும்.

உணவு மற்றும் பானங்கள்

சில உணவுகள் மற்றும் பானங்கள் உங்களை வெப்பமாக உணர வைக்கும். காரமான உணவுகள், காஃபின் கலந்த பானங்கள் மற்றும் ஆல்கஹால் ஆகியவை பொதுவான உதாரணங்கள். அவை உங்கள் வளர்சிதை மாற்றத்தை துரிதப்படுத்தலாம், இது உங்களை வெப்பமாக உணர வைக்கும்.

மருத்துவ நிலைகள்

சில உடல்நலப் பிரச்சினைகள் போன்றவை அதிதைராய்டியத்தில் மற்றும் தொற்றுகள், உங்கள் உடலில் அதிக வெப்பத்தை உருவாக்கக்கூடும். சில மருந்துகள் பக்க விளைவாக உடல் வெப்பநிலை அதிகரிப்பையும் ஏற்படுத்தும்.

எங்கள் வருகை பொது மருத்துவத் துறை உடல் சூட்டிற்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து, தகுந்த மருத்துவச் சிகிச்சையைப் பெறுதல்.

உடல் சூடு மற்றும் நீர்ப்போக்கு

நீரிழப்பு உங்கள் உடலை குளிர்விப்பதை கடினமாக்கும். நீங்கள் நீரிழப்புடன் இருக்கும்போது, நீங்கள் அதிகமாக வியர்க்க மாட்டீர்கள், இது வெப்பத்தை வெளியிடுவதற்கான உங்கள் உடலின் முதன்மையான வழியாகும். உங்கள் உடல் வெப்பநிலையை நிர்வகிக்க உதவும் திரவங்கள், குறிப்பாக தண்ணீர், நிறைய குடிக்க வேண்டும்.

வெப்பம் தொடர்பான நோய்கள்

அதிகப்படியான உடல் வெப்பத்தை சரியாக நிர்வகிக்கவில்லை என்றால், அது வழிவகுக்கும் வெப்பம் தொடர்பான நோய்கள் போன்ற:

1. வெப்ப பிடிப்புகள்

அதிக உடற்பயிற்சியின் போது தசை வலிகள் அல்லது பிடிப்புகளை நீங்கள் அனுபவிக்கலாம், இது பெரும்பாலும் திரவம் மற்றும் உப்பு இழப்பால் ஏற்படுகிறது.

2. வெப்ப சோர்வு

அதிக வியர்வை, பலவீனம், தலைச்சுற்றல், குமட்டல் மற்றும் விரைவான நாடித்துடிப்பு போன்ற அறிகுறிகள். இதற்கு உடனடி குளிர்ச்சி மற்றும் நீரேற்றம் தேவைப்படுகிறது.

3. ஹீட் ஸ்ட்ரோக்

உங்கள் உடல் வெப்பநிலை 104யிஊ (40யிஇ) க்கு மேல் அதிகரிக்கும் ஒரு கடுமையான நிலை. குழப்பம், மயக்கம் மற்றும் வலிப்புத்தாக்கங்கள் போன்ற அறிகுறிகள். வெப்ப பக்கவாதம் தேவைப்படுகிறது அவசர மருத்துவ பராமரிப்பு. எங்கள் பொது மருத்துவ நிபுணர்கள் நிபுணர் வழிகாட்டுதல் மற்றும் சிகிச்சையின் மூலம் வெப்பம் தொடர்பான நோய்களால் ஏற்படும் சிக்கல்களை நிர்வகிக்கவும் தடுக்கவும் உதவும்.

அதிகப்படியான உடல் வெப்பத்தை நிர்வகித்தல்

அதிகப்படியான உடல் வெப்பத்தை நிர்வகிக்கவும் குறைக்கவும் சில எளிய மற்றும் பயனுள்ள வழிகள் உள்ளன. இங்கே சில நடைமுறை குறிப்புகள் உள்ளன:

தண்ணீர் குடி

பகலில் நிறைய தண்ணீர் குடிக்க மறக்காதீர்கள் - சுமார் 8 கப் தண்ணீர் குடிக்க முயற்சி செய்யுங்கண்ள்! நீங்கள் சுறுசுறுப்பாக இருந்தால் அல்லது வெளியே மிகவும் சூடாக இருந்தால், உங்களுக்கு இன்னும் அதிகமாக தேவைப்படலாம். சர்க்கரை பானங்கள், காபி மற்றும் ஆல்கஹால் ஆகியவற்றை உட்கொள்ள வேண்டாம், ஏனெனில் இவை உண்மையில் உங்களை அதிக நீரிழப்புடன் உணர வைக்கும்.

இலகுவான ஆடைகளை அணியுங்கள்

பருத்தி போன்ற லேசான பொருட்களால் செய்யப்பட்ட ஆடைகளைத் தேர்ந்தெடுக்கவும். தளர்வான ஆடைகள் உங்கள் உடலைச் சுற்றி காற்று புழக்கத்திற்கு அனுமதிக்கும், இது உங்களை குளிர்ச்சியாக வைத்திருக்க உதவும்.

குளிர் மழை எடுங்கள்

குளிர்ந்த நீரில் குளிப்பதோ அல்லது குளிப்பதோ உங்கள் உடல் வெப்பநிலையைக் குறைக்க உதவும். நீங்கள் மிகவும் சூடாக உணர்ந்தால், நன்றாக உணர இது ஒரு சிறந்த வழியாகும்.

மின் விசிறிகள் அல்லது ஏர் கண்டிஷனிங் பயன்படுத்தவும்மின்விசிறிகள் மற்றும் ஏர் கண்டிஷனிங் உங்கள் சூழலில் வெப்பநிலையைக் குறைக்க உதவும். நீங்கள் வெளியில் இருந்தால், நிழலான பகுதியைக் கண்டுபிடித்து, கிடைத்தால் ஒரு சிறிய மின்விசிறியைப் பயன்படுத்தவும்.அதிகப்படியான உடல் உஷ்ணத்திற்கான குளிர்ச்சி நுட்பங்கள்

உங்கள் உடல் வெப்பநிலையைக் குறைப்பதற்கான சில விரைவான வழிகள் இங்கே:

குளிர்துணிகள்: உங்கள் நெற்றி, கழுத்து மற்றும் மணிக்கட்டுகளில் குளிர்ந்த, ஈரமான துணியை வைப்பது உங்கள் உடல் வெப்பநிலையைக் குறைக்க உதவும்.

ஐஸ் பொதிகள்: ஐஸ் கட்டிகளை ஒரு துணியில் சுற்றி, உங்கள் அக்குள், இடுப்பு அல் லது கழுத்து போன்ற பகுதிகளில் வைக்கவும், இதனால் விரைவான குளிர்ச்சி கிடைக்கும்.நீர்சிகிச்சையை: உங்கள் கால்களை குளிர்ந்த நீரில் நனைப்பதும் உங்கள் உடல் வெப்பநிலையைக் குறைக்க உதவும்.

அதிக உடல் உஷ்ணத்திற்கு தவிர்க்க வேண்டிய உணவுகள்

சில உணவுகள் உங்கள் உடல் வெப்பநிலையை அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த தவிர்க்க வேண்டிய சில உணவுகள் இங்கே:

காரமான உணவுகள்: இவை உங்கள் உடல் வெப்பநிலையை உயர்த்தி, உங்களை வெப்பமாக உணர வைக்கும்.

காஃபின்: காபி, தேநீர் மற்றும் சில சோடாக்களில் காணப்படும் காஃபின், உங்களை நீரிழப்பு செய்து உங்கள் உடல் வெப்பநிலையை அதிகரிக்கும்.

மது: மது அருந்துவது நீரிழப்புக்கு வழி வகுக்கும், மேலும் உங்கள் உடல் வெப்பநிலையையும் அதிகரிக்கும்.

அதற்கு பதிலாக, வெள்ளரிகள், தர்பூசணி மற்றும் தயிர் போன்ற குளிர்ச்சியான உணவுகளைத் தேர்ந்தெடுக்கவும்.

அதிக வியர்வை மற்றும் உடல் சூடு

வியர்வை என்பது உங்கள் உடலின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்தும் இயற்கையான வழியாகும். ஆனால் அதிகப்படியான வியர்வை அசௌகரியமாகவும் சில சமயங்களில் சங்கடமாகவும் இருக்கும். அதை நிர்வகிக்க சில குறிப்புகள் இங்கே:

வியர்வை எதிர்ப்பு மருந்துகள்: வியர்வையைக் குறைக்க உதவும் வலுவான வியர்வை எதிர்ப்பு மருந்தைப் பயன்படுத்துங்கள்.லேசான ஆடைகளை அணியுங்கள்: வியர்வையை உறிஞ்சி, உங்கள் சருமத்தை சுவாசிக்க அனுமதிக்கும் பருத்தி போன்ற சுவாசிக்கக்கூடிய துணிகளைத் தேர்ந்தெடுக்கவும்.அமைதிகாக்கவும்: உங்கள் சூழலை வசதியாக வைத்திருக்க மின்விசிறிகள், ஏர் கண்டிஷனிங் மற்றும் பிற குளிரூட்டும் முறைகளைப் பயன்படுத்தவும்.ஹார்மோன் மாற்றங்களால் அதிக உடல் சூடு

ஹார்மோன் மாற்றங்கள், குறிப்பாக மாதவிடாய் காலத்தில், உடல் வெப்பநிலையில் திடீர் அதிகரிப்பு ஏற்படும், இது ஹாட் ஃப்ளாஷ் எனப்படும். அவற்றை நிர்வகிக்க சில குறிப்புகள் இங்கே:

அமைதிகாக்கவும்: உங்கள் வீட்டை வசதியான வெப்பநிலையில் வைத்திருங்கள் மற்றும் லேசான, சுவாசிக்கக்கூடிய ஆடைகளை அணியுங்கள்.தூண்டுதல்களைத் தவிர்க்கவும்: காரமான உணவுகள், காஃபின் மற்றும் மன அழுத்தம் போன்ற சில விஷயங்கள் உங்களை சூடாக உணர வைக்கும். உங்கள் சூடான ஃப்ளாஷ்களைத் தூண்டுவதைக் கண்டுபிடித்து அவற்றைத் தவிர்க்க முயற்சிப்பது உதவியாக இருக்கும்.ஹைட்ரேட்: உங்கள் உடல் வெப்பநிலையைக் கட்டுக்குள் வைத்திருக்க நிறைய தண்ணீர் குடிக்கவும்.

மருத்துவ உதவியை எப்போது நாட வேண்டும்?

பெரும்பாலான நேரங்களில், நீங்கள் வீட்டிலேயே அதிக வெப்பத்தை நிர்வகிக்கலாம், ஆனால் சில நேரங்களில் மருத்துவ உதவியை நாடுவது அவசியம். பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றை நீங்கள் அனுபவித்தால் நீங்கள் ஒரு மருத்துவரை சந்திக்க வேண்டும்:

தொடர்ந்து அதிக உடல் வெப்பநிலை.

கடுமையான நீரிழப்பு.

வெப்ப சோர்வு அல்லது வெப்ப பக்கவாதத்தின் அறிகுறிகள்.அதிக வெப்பத்தை ஏற்படுத்தக்கூடிய பிற உடல்நலப் பிரச்சினைகள்.

# தோல்விகளில் இருந்து மீண்டு வருமா லக்னோ அணி? - ராஜஸ்தான் ராயல்ஸ் உடன் மோதல்

லக்னோ: ஐபிஎல் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு லக்னோவில் உள்ள ஏகானா கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் - ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதுகின்றன.

ரியான் பராக் தலைமையிலான ராஜஸ்தான் ராயல்ஸ் அணி 6 ஆட்டங்களில் விளையாடி 4 வெற்றி, 2 தோல்விகளுடன் 8 புள்ளிகள் பெற்று பட்டியலில் 3-வது இடத்தில் உள்ளது. முதல் 4 ஆட்டங்களிலும் தொடர்ச்சியாக வெற்றிகளை குவித்த அந்த அணி கடைசியாக விளையாடிய 2 ஆட்டங்களிலும் உயர்மட்ட செயல் திறனை வெளிப்படுத்தத் தவறியது.






பேட்டிங்கில் யஷஸ்வி ஜெய்ஸ்வால், வைபவ் சூர்யவன்ஷி மற்றும் துருவ் ஜுரெல் ஆகிய முதல் மூன்று வீரர்களே பலமாக இருந்து வருகின்றனர். இவர்கள் சோபிக்கத்தவறும் போதெல்லாம் அந்த அணி பெரும் போராட்டத்தை எதிர்கொள்கிறது. தோல்வி அடைந்த 2 ஆட்டங்களில் ஹைதராபாத் அணிக்கு எதிராக தொடக்க வீரர்களான யஷஸ்வி ஜெய்ஸ்வால் ஒரு ரன்னிலும், வைபவ் சூர்யவன்ஷி ரன் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்து இருந்தனர்.

ஆனால் கொல்கத்தாவுக்கு எதிரான ஆட்டத்தில் இந்த ஜோடி 8 ஓவர்களில் 81 ரன்கள் விளாசியது. இருப்பினும் நடுவரிசையில் ரியான் பராக், துருவ் ஜுரெல், ஷிம்ரன் ஹெட்மயர், டோனோவன் பெரைரா உள்ளிட்டோரிடம் இருந்து தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அளவிலான மட்டை வீச்சு வெளிப்படவில்லை.

சஞ்சு சாம்சனின் வெளியேற்றத்துக்குப் பிறகு, எதிர்பாராத விதமாக கேப்டனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ரியான் பராக், பேட்டிங்கில் மிகவும் மோசமான காலக்கட்டத்தை எதிர்கொண்டுள்ளார். நடப்பு தொடரில் அவர், இதுவரை விளையாடிய 6 ஆட்டங்களில் 3 முறை ஒற்றை இலக்க ரன்களில் ஆட்டமிழந்துள்ளார். அவரது அதிகபட்ச ஸ்கோர் 20 மட்டுமே.

அனுபவ வீரரான ரவீந்திர ஜடேஜாவிடம் இருந்து வெற்றிக்கான பங்களிப்பு வெளிப்படவில்லை. அதிரடி வீரரான ஷிம்ரன் ஹெட்மயர் 4 ஆட்டங்களில் விளையாடி வெறும் 39 ரன்களே எடுத்துள்ளார். இவர்கள் பார்முக்கு திரும்பினால் மட்டுமே அணியின் பலம் அதிகரிக்கும். பீல்டிங்கிலும் ராஜஸ்தான் அணி முன்னேற்றம் காண வேண்டும்.

கொல்கத்தாவுக்கு எதிரான ஆட்டத்தில் ரிங்கு சிங் 8 ரன்னில் இருந்தபோது கொடுத்த கேட்ச்சை நந்த்ரே பர்கர் தவறவிட்டார். இதற்கான பலனை ராஜஸ்தான் அணி அனுபவித்தது. அந்த ஆட்டத்தில் ரிங்கு சிங் 53 ரன்கள் விளாசி ராஜஸ்தான் அணியிடம் இருந்து வெற்றியை பறித்து இருந்தார்.

இத்தகைய பின்னடைவுகளுக்கு மத்தியிலும், லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணியை விட ராஜஸ்தான் ராயல்ஸ் பலமான அணியாகவே கருதப்படுகிறது. ரிஷப் பந்த் தலைமையிலான லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி 6 ஆட்டங்களில் விளையாடி 2 வெற்றி, 4 தோல்விகளுடன் 4 புள்ளிகள் பெற்று பட்டியலில் 9-வது இடத்தில் உள்ளது. தொடர்ச்சியாக 3 ஆட்டங்களில் தோல்வி அடைந்துள்ள அந்த அணி வெற்றிப் பாதைக்கு திரும்புவதில் கவனம் செலுத்தக்கூடும்.

இருப்பினும் அது அவ்வளவு எளிதாக இருக்காது. ஏனெனில் பஞ்சாப் கிங்ஸ் அணியால் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணியின் பந்து வீச்சு வரிசை சிதைக்கப்பட்டு இருந்தது. அந்த ஆட்டத்தில் பஞ்சாப் அணி 254 ரன்களை குவித்து மிரட்டியிருந்தது. பிரியன்ஸ் ஆர்யா, கூப்பர் கானொலி ஜோடி 2-வது விக்கெட்டுக்கு 13.2 ஓவர்களில் 182 ரன்களை வேட்டையாடி இருந்தது. இவர்களின் அதிரடி ஆட்டம் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணியின் பந்து வீச்சை நிலைகுலையச் செய்து, கடும் அழுத்தத்திற்கு உள்ளாக்கியது.

இதில் பிரின்ஸ் யாதவ் மட்டுமே நம்பிக்கையூட்டும் ஒளிக்கீற்றாகத் திகழ்ந்தார். அவர், அந்த ஆட்டத்தில் 25 ரன்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 2 விக்கெட்களை கைப்பற்றிருந்தார். வேகப்பந்து வீச்சாளர்களான ஆவேஷ் கான், முகமது ஷமி ஆகியோர் பந்தைக் கட்டுப்படுத்த முடியாமல் திணறி வருகின்றனர். அதேபோல், மணிமாறன் சித்தார்த்தின் பந்துவீச்சிலும் அதிக ரன்கள் கசிந்துள்ளன. எனினும் இன்றைய ஆட்டத்தில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் பலவீனமான மிடில் ஆர்டர் பேட்டிங்கை லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் குறிவைக்கக்கூடும். அதே நேரத்தில், லக்னோ அணியின் பேட்டிங் வரிசையும் ஒரு நிலையற்ற தன்மையிலேயே காணப்படுகிறது.

தங்களது சிறந்த ஆடும் லெவன் எது என்பதைக் கண்டறிய அவர்கள் இன்னும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். கடந்த ஆட்டத்தில் மிட்செல் மார்ஷ் உடன் ஆயுஷ் பதோனியைத் தொடக்க வீரராகக் களமிறக்கும் முடிவு அவர்களுக்குப் பலன் அளிக்கவில்லை. மிட்செல் மார்ஷ் அடுத்தடுத்து இரண்டு போட்டிகளில் 40 ரன்கள் எடுத்திருந்தாலும், சிறந்த தொடக்கத்தை பெரிய ஸ்கோராக மாற்றத் தவறினார். அதேபோல், கேப்டன் ரிஷப் பந்த் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை.

நிக்கோலஸ் பூரன் ஃபார்மில் இல்லாமல் இருப்பது அணியின் சிக்கல்களை மேலும் அதிகரித்துள்ளது. இக்கட்டான சூழலில் இருந்து லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி மீண்டு வர வேண்டுமானால், அவர்களது பேட்டிங் மற்றும் பந்துவீச்சு ஆகிய இரண்டு பிரிவுகளும் ஒருங்கிணைந்து சிறப்பாகச் செயல்பட வேண்டியது அவசியம்.

# அபிஷேக் சர்மா சதம் விளாசல்: டெல்லியை 47 ரன் வித்தியாசத்தில் வீழ்த்தியது ஹைதராபாத்

ஹைதராபாத்: ஐபிஎல் 2026 தொடரின் 31-வது லீக் ஆட்டத்தில், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 47 ரன்கள் வித்தியாசத்தில் டெல்லி கேபிடல்ஸை வீழ்த்தி அபார வெற்றி பெற்றது.



உப்பலில் உள்ள ராஜீவ் காந்தி சர்வதேச மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில், டாஸ் வென்ற டெல்லி அணி முதலில் பந்துவீச்சைத் தேர்வு செய்தது. ஹைதராபாத் தொடக்க வீரர் அபிஷேக் சர்மா ஆரம்பம் முதலே டெல்லி பந்துவீச்சை சிதறடித்தார். வெறும் 47 பந்துகளில் சதம் கடந்த அவர், இறுதிவரை ஆட்டமிழக்காமல் 68 பந்துகளில் 135 ரன்கள் (10 பவுண்டரிகள், 10 சிக்ஸர்கள்) குவித்து மிரட்டினார்.

டிராவிஸ் ஹெட் (37) மற்றும் இஷான் கிஷன் (25) ஆகியோர் அவருக்குத் துணையாக ஆட, இறுதியில் ஹென்ரிச் கிளாசன் அதிரடியாக 13 பந்துகளில் 37 ரன்கள் சேர்த்தார். இதனால் ஹைதராபாத் அணி 20 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 242 ரன்கள் என்ற இலக்கை எட்டியது. 243 ரன்கள் என்ற கடினமான இலக்கை நோக்கி ஆடிய டெல்லி கேபிடல்ஸ் அணிக்கு, நிதீஷ் ராணா (57) மற்றும் கேஎல் ராகுல் (48) ஜோடி ஓரளவுக்கு நம்பிக்கையளித்தது.

ஆனால், மிடில் ஆர்டரில் டேவிட் மில்லர் (0) மற்றும் டிரைஸ்டன் ஸ்டப்ஸ் ஏமாற்றம் அளித்தனர். ஹைதராபாத் பவுலர்கள் ஈஷான் மலிங்கா தனது துல்லியமான யார்க்கர்களால் டெல்லி வீரர்களை நிலைகுலையச் செய்தார். அவர் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றி வெற்றியை எளிதாக்கினார். இறுதியில் டெல்லி அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 195 ரன்கள் மட்டுமே எடுத்துத் தோல்வியைத் தழுவியது.

இந்த வெற்றியின் மூலம் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி புள்ளிப்பட்டியலில் தனது நிலையை மேலும் வலுப்படுத்தியுள்ளது. குறிப்பாக, அபிஷேக் சர்மாவின் இந்த மெகா சதம் மற்றும் ஈஷான் மலிங்காவின் பந்துவீச்சு அணியின் பலத்தை பறைசாற்றியுள்ளது.

# ஐசிசி பேட்டிங் தரவரிசையில் ஷபாலி வர்மா முன்னேற்றம்




துபாய்: மகளிர் டி20 கிரிக்கெட் பேட்டிங் தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது. இந்திய அணியின் தொடக்க வீராங்கனையான ஷபாலி வர்மா 2 இடங்கள் முன்னேறி 6-வது இடத்தை பிடித்துள்ளார். தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக தற்போது நடைபெற்று வரும் இருதரப்பு டி 20 தொடரின் 2-வது ஆட்டத்தில் ஷபாலி வர்மா 38 பந்துகளில் 57 ரன்கள் எடுத்திருந்தார். இதன் மூலம் அவர், ஐசிசி தரவரிசையில் முன்னேற்றம் கண்டுள்ளார். மற்றொரு தொடக்க வீராங்கனையான ஸ்மிருதி மந்தனா ஓர் இடத்தை இழந்து 4-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான தொடரில் அவர், 2 ஆட்டங்களில் முறையே 13, 12 ரன்களே எடுத்திருந்தார். மேற்கு இந்தியத் தீவுகளின் ஹெய்லி மேத்யூஸ் 3-வது இடத்துக்கு முன்னேறி உள்ளார். இந்திய அணியின் கேப்டனான ஹர்மன்பிரீத் கவுர் 2 இடங்கள் முன்னேறி 11-வது இடத்தை பிடித்துள்ளார். மகளிர் உலகக் கோப்பை தொடரில் ஜொலித்த இந்தியாவின் ஜெமிமா ரோட்ரிக்ஸ் 4 இடங்களை இழந்து 14-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். தள்ளப்பட்டுள்ளார். அருந்ததி ரெட்டி 3 இடங்களை இழந்து 12-வது இடத்தை பிடித்துள்ளார்.

# சென்னை அணி வீரர் ஆயுஷ் மாத்ரே விலகல்



சென்னை: நடப்பு ஐபிஎல் தொடரில் சென்னை சூப்பர்கிங்ஸ் அணியின் இளம் அதிரடி வீரரான ஆயுஷ் மாத்ரே, கடந்த 2 நாட்களுக்கு முன் நடந்த சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் பேட்டிங் செய்தபோது இடது தொடையில் ஏற்ண்ணபட்ட தசைப்பிடிப்பால் கடும் அவதியடைந்தார். சில பந்துகளில் தாக்குபிடிக்க முடியாமல் அவுட்டாகி வெளியேறினார். மருத்துவக்குழுவினர் பரிசோதித்ததில், இடது தொடை தசைநார் பகுதி கிழிந்து பலத்த காயமடைந்திருப்பது தெரிந்தது. மருத்துவ சிகிச்சையில் உள்ள ஆயுஷ் மாத்ரே, குணமடைய 6 முதல் 12 வாரங்கள் ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், ஐபிஎல் தொடரில் இருந்து ஆயுஷ் மாத்ரே விலகியுள்ளார். தான் ஆடிய 6 ஆட்டங்களில் 177 ஸ்ரைக் ரேட் வைத்துள்ள அவர், சிஎஸ்கே அணியில் இருந்து விலகியிருப்பது அந்த அணிக்கு பெரும் இழப்பாகும். ஏற்கனவே காலில் ஏற்பட்ட காயத்திற்காக மகேந்திரசிங் டோனி களமிறங்காதநிலையில், மற்றொரு முன்னணி வீரர் விலகியிருப்பது அந்த அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

# ‘ஜெயிலர் 2’ படப்பிடிப்பு நிறைவு



நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்து மெகா வெற்றி பெற்ற திரைப்படம் ‘ஜெயிலர்’. இதில் ரம்யா கிருஷ்ணன், விநாயகன், மிர்ணா, யோகிபாபு உள்பட பலர் நடித்தனர்.

சிவராஜ்குமார், மோகன்லால் கவுரவ வேடத்தில் நடித்தனர். சன் பிக்சர்ஸ் தயாரித்த இப்படம் ரூ.600 கோடிக்கு மேல் வசூலித்து சாதனை படைத்தது.

இதையடுத்து இதன் அடுத்த பாகம் ‘ஜெயிலர் 2’ என்ற பெயரில் உருவாகியுள்ளது. முதல் பாகத்தில் நடித்தவர்களுடன் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சரமூடு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். விஜய் கார்த்திக் கண்ணன் ஒளிப்பதிவு செய்துள்ள இப்படத்துக்கு அனிருத் இசை அமைத்துள்ளார்.

இந்நிலையில் இதன் மொத்த படப்பிடிப்பும் நிறைவடைந்துள்ளதாக சன் பிக்சர்ஸ் அறிவித்துள்ளது. படக்குழுவினர் ரஜினிகாந்துடன் கேக் வெட்டி கொண்டாடும் புகைப்படத்தையும் படக்குழு வெளியிட்டுள்ளது.

# தனுஷ் இயக்கத்தில் மிருணாள் தாக்குர்



தனுஷ் நடித்துள்ள ‘கர’ படம் ஏப்.30ம் தேதி வெளியாக இருக்கிறது. விக்னேஷ் ராஜா இயக்கியுள்ள இப்படத்தில் மமிதா பைஜு, சுராஜ் வெஞ்சரமூடு, கே.எஸ். ரவிகுமார் உள்பட பலர் நடித்துள்ளனர்.

ராமநாதபுரம் பின்னணியில் உருவாகியுள்ள இப்படத்தை அடுத்து ராஜ்குமார் பெரியசாமி இயக்கும் படத்தில் நடிக்கிறார் தனுஷ். இதில் ஸ்ரீலீலா, சாய் பல்லவி நாயகிகளாக நடிக்கின்றனர். இது தொடர்பான அறிவிப்பு வெளியாகி இருந்தது. பின்னர், தமிழரசன் பச்சமுத்து இயக்கும் படத்திலும் அவர் நடிக்க இருக்கிறார்.

இதற்கிடையே ‘இட்லி கடை’ படத்துக்குப் பிறகு மீண்டும் படம் இயக்கி நடிக்க இருக்கிறார் தனுஷ். 1960-ல் நடப்பது போன்ற கதையைக் கொண்ட இது நாயகியை மையப்படுத்தியது என்றும் அதில் மிருணாள் தாக்குர் நடிக்க இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இவர்கள் இருவரும் காதலித்து வருவதாகவும் திருமணம் செய்துகொள்ள இருப்பதாகவும் செய்திகள் வெளியானது. அதை மிருணாள் தாக்குர் மறுத்திருந்தார். இந்நிலையில் இருவரும் புதிய படத்தில் இணைவதாக வெளியான தகவல் இணையத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது.

# விக்ரம் பிரபுவின் புதிய படம் அறிவிப்பு



விக்ரம் பிரபு நடிக்கவுள்ள அடுத்த படத்தின் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

‘சிறை’ படத்தின் பிரம்மாண்ட வெற்றிக்குப் பிறகு, தனது அடுத்தடுத்த படங்களில் தீவிர கவனம் செலுத்தி வந்தார் விக்ரம் பிரபு. பல இயக்குநர்களிடம் கதைகள் கேட்டாலும், எதையும் அதிகாரபூர்வமாக அறிவிக்காமல் இருந்தார்.

இறுதியாக அறிமுக இயக்குநர் சித்தார்த்தின் படத்தில் நடிக்கவிருப்பதை உறுதி செய்திருக்கிறார்.

ரோமியோ பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தை சித்தார்த் இயக்க, நாயகனாக விக்ரம் பிரபு நடிப்பது உறுதியாகி இருக்கிறது. இதில் விக்ரம் பிரபு உடன் நடிக்கும் நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் தேர்வும் முரமாக தொடங்கவுள்ளது. ஒரே கட்டமாக படப்பிடிப்பை முடிக்கவும் திட்டமிட்டுள்ளது படக்குழு.

சித்தார்த் படத்தை முடித்துவிட்டு, மீண்டும் புதுமுக இயக்குநர் கதையில் நடிக்க விக்ரம் பிரபு முடிவு செய் திருக்கிறார். இது தொடர்பான அறிவிப்பும் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

TO ADVERTISE
PLEASE CONTACT
மெட்ராஸ் மணி
MADRAS MANI
NATIONAL TAMIL DAILY NEWS PAPER
9000657700
9912220350
e.mail : info.southindiatimes@gmail.com

Printed Published and Owned by Buchi Babu Vuppala, Printed At Thanmayee Printers, No:7,3 RD street, Krishna Nagar, Moouarasampet, Madipakkam Chennai-91, Tamil Nadu. Published from 8/5, Mannarswamy koil street, PULIANTHOPE, Chenni-600012, Tamil Nadu Editor: **H.MD. HARIEF**, mail: info.southindiatimes@gmail.com, phone.9000657700, **RNI Reg No. TNTAM/2018/75087.**